Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை-24 | 09-12-2004 | வியாழக்கிழமை | ஓசை -295

க ணே சா ந கை ய க ம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-10932)



# ஆளும்கட்சியின் உள்ளக முரண்பாடுகள் காரணமாக

# போர்நிறுத்த உடன்பாடு நாளுக்குநாள் சிதைவு

## ஐ.தே.க.பேச்சாளர் ஜீ.எல் பீரிஸ்

**ஜே.வி.பி.யினர் சமாதான முன்னெடுப்புக்களிலிருந்து நோர்வே அனுசரணையாளர்கள் விலக வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஆனால் சனாதிபதி நோர்வேயினர் தொடர்ந்தும் அனுசரணையாளராகச் செயற்பட வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். இது சிறிலங்கா ஆளும் கட்சிகளுக்கிடையில் உள்ளக முரண்பாடுகள் சமாதான முன்னெடுப்புக்களில் உச்சநிலையை அடைந்துள்ளது. என்பதைக் காட்டுகிறது. இதனால் போர்நிறுத்த உடன்படிக்கை நாளுக்கு நாள் சிதைவுக்குள்ளாகிறது என ஐக்கிய தேசியக்கட்சி பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

நேற்று எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சனாதிபதிக்கு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களைத் தீர்ப்பதற்கு ஆர்வமில்லை ஆனால் தனது அரசியல் ஆதாயத்திற்காக அரசியலமைப்பு மாற்றம் சபாநாயகரை நீக்குதல் அரசியல் நிர்ணயசபையை நோக்கிப் பாராளுமன்றத்தை மாற்றுதல் என்பதிற் கருத்தாயுள்ளார் எனவும் குறிப்பிட்டார்(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு-தினக்குரல் காரியாலயம் மீது இனந்தெரியாதோர் கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு நகருக்குவெளியே அரசடிச் சந்திக்கு அண்மையிலுள்ள தினக்குரல் காரியாலயம் மீது நேற்று மாலை 6.45 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தின்போது அருகிலுள்ள கட்டட உரிமையாளரான சட்டத்தரணி அலுவலகத்தின் மேல் மாடியில் இருந்துள்ளார். வெடித்துச் சிதறிய கைக்குண்டினால் அலுவலகம் சிறுசேதத்திற்கு உள்ளானது. இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய நபர் கைக்குண்டை அலுவலகத்தின் உள்ளே உருட்டி விட்டுச் சென்றுள்ளார். இது தொடர்பாக சட்டத்தரணி விஸ்வை சர்வானந்தா மட்டக்களப்பு பொலிசில் புகார் செய்துள்ளார்.

இதனை அடுத்து கண்காணிப்புக் குழுவினர், காவல்துறையினர், இராணுவத்தினர்,விசேடஅதிரடிப் படையினர் ஆகியோர் ஸ்தலத்திற்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## எஸ்.பி.திசாநாயக்க விவகாரத்தால் பாராளுமன்றத்தில் நேற்றும் அமளிதுமளி

### செங்கோலைத் தூக்கிக்கொண்டு மகேஸ்வரன் ஓடினார்

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திசாநாயக்கவுக்கு இரண்டு வருட கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக நேற்றும் பாராளுமன்றத்தில் ஐ.தே.க வினர் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். இதனால் பாராளுமன்றம் இருதடவை ஒத்தி வைக்கப்பட்டது. அமளிதுமளிக்கு மத்தியில் கொழும்பு மாவட்ட ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் செங்கோலைத்தூக்கிச் சென்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

முன்னாள் அமைச்சரும் தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திசாநாயக்கவிற்கு நேற்று முன்தினம் நீதிமன்றத்தை அவமதித்தார். என்ற குற்றச்சாட்டின் (12 ஆம் பக்கம் பார்க்க)



## புளொட் யாழ். அலுவலகம் மீது அடுத்தடுத்துக் கைக்குண்டுவீச்சு

யாழ். நகரப் பகுதியிலுள்ள தமிழீழ விடுதலைக் கழகத்தின் பணிமனை மீது இரு கைக் குண்டுகள் நேற்றிரவு வீசப்பட்டுள்ளன. முன்னதாக இரவு 8.55 மணியளவில் முதலாவது கைக்குண்டு வெளியிலிருந்து வீசப்பட்டது. இக்குண்டு பெரும் சத்தத்துடன் வெடித்திருந்த நிலையில் மீண்டும் சில நிமிட இடைவெளியின் பின்னர் இரண்டாவது கைக் குண்டு சுமார் 9.15 மணியளவில் வீசப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

எனினும் இரு கைக் குண்டுகளும் வீசப்பட்ட போது அங்கு தமது அமைப்பின் அங்கத்தவர்கள் எவரும் தங்கியிராமையால் சேதமேதும் ஏற்பட்டிருக்கவில்லையென புளொட் அமைப்பின் யாழ் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மைக்காலப் பகுதியில் யாழ். வேம்படி வீதிப்பகுதியிலுள்ள புளொட் அமைப்பின் யாழ். அலுவலகம் இதேபோன்று கைக் (12 ஆம் பக்கம் பார்க்க)

### -தமிழீழ காவல் துறையின்-

## வட்டுவாகல் சீர்திருத்தப் பிரிவுக்கு சர்வதேச செஞ்சிலுவையினர் விஜயம்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ காவல்துறையினரின் வட்டுவாகல் சீர்திருத்தப் பிரிவுக்கு நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வன்னி வதிவிடப்பிரதிநிதி செல்வி ரசல்பேனாட், மொழிபெயர்ப்பாளர் டங்கன் ஆகியோர் விஜயம் மேற்கொண்டு குற்றப்புலனாய் வுப்பிரிவுப் பொறுப்பதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன் அங்கு பாதுகாப்பில் இருந்த கைதிகளையும் சந்தித்து உரையாடினர். மேற்படி சந்திப்பு நேற்று முன்தினமும், நேற்றும் வட்டுவாகல் சீர்திருத்தப்பிரிவில் இடம்பெற்றது. மேற்படி குழுவினர் குற்றப்புலனாய்வுப்பிரிவு கண்காணிப்பாளர் தே.கானகன் குற்றப்புலனாய்வுப்பிரிவுப் பொறுப்பாளர் தியகீரதன வட்டுவாகல் சீர்திருத்தப்பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவனேசராசா காவல்துறை உபபரிசோதகர் அ.ஞானமுத்து ஆகியோருடன் சந்தித்துக்கலந்துரையாடியதுடன் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளையும் நேரில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகருக்கு எதிராக விரைவில் நம்பிக்கையில்லாத் தீர்மானம்

### ஆளும் கட்சி முடிவு

சிறிலங்கா பாராளுமன்றச் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முடிவு எடுத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்தபின் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளேயின் பாராளுமன்ற அறையில் ஊடகவியலாளர்கள் மகாநாட்டில் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கருத்துத் தெரிவிக்கையில்: மகேஸ்வரனின் நடவடிக்கையின்போது

சபாநாயகர் அதனைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாததால் தாம் இந்தத் தீர்மானம் எடுத்ததாகத் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசாங்கத்தில் அமைச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பளை கமநல சேவைக்கட்டடத்தினுள் வயோதிபரின் சடலம் கண்டுபிடிப்பு

பளை கமநல சேவைகள் திணைக்கள கட்டடத்தினுள் வயோதிபரின் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. பளைப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட கமநலசேவைகள் கட்டடத்தினுள் நேற்றுக் காலை வேளையில் சடலம் ஒன்று இருப்பதைக் (12 ஆம் பக்கம் பார்க்க)



## இந்திய-இலங்கை கூட்டு கடற்பயிற்சி சிறிலங்காவின் மேற்குக்கரையில் ஆரம்பம்

இந்தியக் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரும் சிறிலங்காக் கடற்படையினரும் இணைந்த பயிற்சி எதிர்வரும் 14 ஆம் திகதி சிறிலங்காவின் மேற்குக் கடற்கரையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் இரு இந்திய நவீன கரையோர ரோந்துக்கலங்கள், வானூர்தி, உலங்குவானூர்தி என்பனவும் இலங்கைப்போர்க் கப்பல் சயூறா, கரையோர ரோந்துக்கலமான ஜயசாகரா பீரங்கிப்படகுகள் இரு வேகத்தாக்குதல் விமானங்கள் என்பன பயன்படுத்தப்படவுள்ளன. இது இரு நாடுகளிற்கும் இடையிலான பாதுகாப்புப் புரிந்துணர்வின் ஒரு பகுதியென இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# திருமலையில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சார இயக்கம் ஆரம்பம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட சிறுவர்பாதுகாப்புக்குழு, யுனிசெவ் அமைப்பின் ஆதரவுடன் திருகோணமலை மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சார இயக்கம் ஒன்றை நேற்றுப் புதன் கிழமை அங்குரார்ப்பணம் செய்தது. இவ்வியக்கத்தைத் தமிழர்புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பள்ளி ஆசிரியைகளின் துணையுடன் நடைமுறைப்படுத்து கின்றது.

அங்குரார்ப்பண நிகழ்விற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்ட செயலகத்திட்ட அலுவலர் வி.கலைவர்ணன் தலைமை வகித்தார். திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்கஅதிபர் என். சிங்கராயர், திருமலை உதவிப் பிரதேச செயலாளர் திருமதி எஸ். ஜலதீபன், யுனிசெவ் திருகோணமலை மாவட்டஅதிகாரி கபிரியெல்லா எல்றோய். உதவிப் பொலிஸ் அதிபர் பிரியந்தவீரசூரியா, யுனிசெவ் சிறுவர் பாதுகாப்பு அதிகாரி டேவிட்லமின், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருமலை பிராந்திய இணைப்பாளர் திருமதி மதியாபரணம் ஆகியோர் பங்குபற்றினர். யுனிசெவ் திருமலை தலைமை அதிகாரி கபிரியெல்லா எல்றோய் பேசுகையில், சிறுவர்களைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தாத பொறுப்பு வயது வந்தவர்களுக்கு உண்டு. தங்களைத் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தக் கூடாது என்று கோரும் உரிமை சிறுவர்களுக்குஉண்டு என்று குறிப்பிட்டார்.

திருமலை மாவட்டத்தில் சமூகத்தின் சகல நிலைகளிலும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக திருமலை மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவுடன் கைகோர்த்துச்செயற்பட முன்வர வேண்டும் என்றும் கபிரியெல்ல எல்றோய் கேட்டுக்கொண்டார். திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிங்கராயர் பேசுகையில், “சிறுவர் துஷ்பிரயோகம் நீக்கப்பட வேண்டும் நாட்டின் எதிர் காலம் இன்றைய சிறுவர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. எனவே சிறுவர்களை உடல் , உளஆரோக்கியமுள்ளவர்களாக உருவாக்க பெரியவர்கள் செயற்பட வேண்டும்” என்றார். உதவிப் பிரதேச செயலாளர் திருமதி எஸ். ஜலதீபன் பேசும்போது, சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக விழிப்புணர்ச்சி இயக்கம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சமூகத்திற்கு பெரும் நன்மை ஏற்படும்என்றார். விழிப்புணர்ச்சி வாரம் டிசம்பர்15 வரை திருகோணமலை மாவட்டத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இவ்வாரத்தில் ஒலிபெருக்கி மூலம் பிரகாரம், வீடு வீடாகச் சென்று அறிவுரை வழங்கல், வீதி நாடகங்கள், சுவரொட்டிகள் ஒட்டுதல் ஆகியன மேற்கொள்ளப்படும் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழக திருமலை மாவட்ட திட்ட அலுவலர் கலைவர்ணன் தெரிவித்தார். (25)

# மன்னாரில் தனியார் பேருந்தில் பயணித்தவரிடம் போதைப்பொருள்

மன்னார் முருங்கனில் நேற்று ஒருதொகுதி ஹரோயின் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை மன்னாரில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தில் ஹரோயின் கொண்டு செல்லப்படுவதாக முருங்கன் பொலிசாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து முருங்கன் பொலிசார் இப் பேருந்தை முருங்கன் பகுதியில் வழிமறித்துச் சோதனை யிட்டனர்.

இதன்போது 3 கிலோகிராம் 200 கிராம் எடை கொண்ட ஹரோயின் கண்டுபிடிக்கப்பட்டது. இதனைக் கொழும்பிற்கு எடுத்துச் சென்றதாக கருதப்படும் நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார் (10)

# வன்னியில் கட்டாக்காலி நாயழிப்பு தீவிரம் வளர்ப்பு நாய்களுக்கு கழுத்துப்பட்டி அணிவிக்குக

-தமிழீழ சுகாதாரசேவையினர் கோரிக்கை

வன்னிப்பகுதியில் நாயழிப்பு நடவடிக்கையானது தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் இயக்கமுகாம்கள், அரச அலுவலகங்கள், வைத்திய சாலைகள், நிறுவனங்கள், மற்றும் பொது இடங்களில் அலைந்து திரியும் நாய்களை அழிக்கும் நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றது. பிரதேசசபையினாலும் இந் நடவடிக்கையானது வழமையாக நடைபெற்று வருகின்றது. எனவே பொது மக்கள் தங்களுடைய வளர்ப்பு நாய்களை அடையாளம் காண்பிப்பதற்கு பிரதேசசபையால் வழங்கப்படும் கழுத்துப்பட்டியை அணிவித்திருத்தல் வேண்டும். கழுத்துப்பட்டி இல்லாத நாய்கள் கட்டாக்காலி நாய்களாகக் கருதி அழிக்கப்படும். எனவே பொதுமக்கள் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர்.

## -திருமலையில் விபுலானந்தாக் கல்லூரியில்-

# புலமைப்பரிசில் பரீட்சையில்சித்தியெய்திய மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு

(திருகோணமலை)

மூதூர் கிழக்கில் உள்ள சேனையூர் விபுலானந்த வித்தியாலயத்தில் 2004ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பதினைந்து மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றை அரும்புகள் கல்வியகம் நடத்தியது.

முதன்மை விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி, பண்பாட்ட லுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் பங்குபற்றினார்.சிறப்பு விருந்தினராக உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார், கௌரவவிருந்தினர்களாக திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபர் எம்.இராசரத்தினம், திருமலை மாவட்ட பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியத்தின் ஸ்தாபக தலைவர் கனகசபை தேவகடாட்சம், திருகோணமலை மாவட்ட மாணவர் நலன்புரி நிதியத்தின் செயலாளர் சி.சசிகுமார் ஆகியோர் பங்குபற்றினர்.

“கிராமப்புற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மூதூர் கிழக்கு அரும்புகள்கல்வியகம் ஆற்றிவரும் சேவை பாராட்டுதற் குரியது. மாகாணக்கல்வி அமைச்சின் ஊடாக இந்நிறுவனத்திற்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்” என்று மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் தெரிவித்தார். உதவிக்கல்விப் பணிப்பாளர் சைவப்புலவர் செ.விபுலானந்த சேகரம்நிகழ்வுக்கு தலைமை வகித்தார். ஐந்தாம் தர மாணவர்களுக்குப் போதித்த ஆசிரியர்களும் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (25)

# கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கனகபுரத்தில் வதியும்காணியுரிமை ஆவணங்கள் அற்றோருக்கான கலந்துரையாடல் 11ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி கனகபுரம் கருணாகரப் பிள்ளையார் ஆலயமுன்றலில் நடைபெறவுள்ளது. காணிஉரிமை ஆவணங்கள் அற்றவர்கள் அன்றையதினம் நடைபெறவுள்ள மேற்படி கலந்துரையாடலில் தவறாதுகலந்து கொள்ளும் வண்ணம் கனகபுரம் கிராமசேவை அலுவலர் சு.பசுபதிப் பிள்ளை வேண்டியுள்ளார். (சோ)

# முள்ளியவளை மருத்துவமனையில் கூரை ஒழுக்கினால் அவலம்

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலை கூரை ஒழுக்கினால் வைத்திய அதிகாரி உட்பட தாதியர்கள் நோயாளர்கள் பெரும் அவலப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

மேற்படி அவல நிலை தொடர்பாக வைத்திய அதிகாரி இராசதுரையிடம் செய்தியாளர் கேட்ட போது அவர் தெரிவிகையில்;

வைத்தியசாலையின் சிறு புனரமைப்பு திருத்த வேலைக்காக சுமார் ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு புனரமைப்பு திருத்த வேலைக்காக ஒப்பந்தகாரரிம் கையளிக்கப்பட்டது.

இதில் வைத்தியசாலைச் சுவர்களுக்கு வர்ணம் பூசப்பட்ட போதிலும் வைத்தியசாலைக் கூரை சீரான முறையில் திருத்தப்படாமையினால் தற்போது ஏற்பட்டுள்ள தொடர்மழை நீர் வைத்தியசாலைக் கூரையில் ஆங்காங்கு ஒழுக்கு ஏற்பட்டுள்ளதால் நோயாளர் தங்குமிடம், நோயாளர்களை பார்வையிடும் இடம், நோயாளர்களுக்கு மருந்து வழங்கப்படும் இடம்,மருந்துக் களஞ்சியம் ஆகிய பகுதிகளில் கடும் ஒழுக்கு ஏற்பட்டு வைத்தியசாலை மழைநேரங்களில் வெள்ளமாகவே உள்ளதுடன் நோயளர்களும் நனைந்து அவலப்பட்டு வருகின்றனர்.

மேற்படி வைத்தியசாலையைத் கூரையினை மீள் திருத்தம் செய்யப்படவேண்டும் என ஒப்பந்தகாரரிடம் கேட்டபோதும் இதுவரை திருத்தம் செய்யாது அசமந்த போக்குடனே உள்ளனர். தொடரும் கடும் மழை ஒழுக்கினால் கூரைத் தடிகளும் கீழே பதிக்கப்பட்ட மட்டப் பலகைகளும் இத்துப் போகும் அவலநிலையுள்ளது எனவும் மேற்படி வைத்தியசாலை வைத்திய அதிகாரி இராசதுரை எமது செய்தியாளரிடம் கவலையுடன் தெரிவித்துள்ளார். (ஆ)


## அந்தியேட்டி அழைப்பும், நன்றி நவிலலும்



மண்ணில் 01 - 06 - 1937

விண்ணில் 10 - 11 - 2004

### அமரர் திரு . அம்பலவி வல்லிபுரம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 10.12.2004ஆம் நாள் (நாளை) புதுக்குடியிருப்பில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும், அன்றைய மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், போராளிகள், காவற்துறையினர், தேசியத்துணைப்படையினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக் கிரியை நிகழ்வில் கலந்து எல்லாவகையிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்,
மருமகன்குடும்பத்தினர்.
(தே.கானகன்)

(4947)



## மாவட்ட செயலகம் கிளிநொச்சி வழங்குனர்களைப் பதிவு செய்தல்-2005

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் அதனோடிணைந்த பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2005 ஆம் ஆண்டில் பின்வரும் சேவைகளை வழங்கக்கூடிய வழங்குனர்கள் எதிர்வரும் 2004.12.31 இற்கு முன்னதாகத் தமது விபரங்களைப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சேவைகள்

01.காதிதாதிகள்,எழுதுகருவிகள், உபகரணங்கள் வழங்கல்
02.கணினி மற்றும் அதனுடன் தொடர்புடைய சாதனங்கள் வழங்கல்
03.அலுவலகத் தளபாடங்கள் வழங்கல்.
04.மின் பொருட்கள் சாதனங்கள் வழங்கல்.
05.வாகனத் திருத்தம், சுத்திகரிப்பு(service)செய்தல்.
06.கட்டட ஒப்பந்த வேலைகள் செய்தல்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.11012)



## வாழ்த்துகின்றோம்



மக்கள்வங்கியினால் மாவட்ட ரீதியாக சிறந்த விளையாட்டு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். விளையாட்டு,கல்வி, கற்றலோடு இணைந்த செயற்பாடு மேலதிக கலைத்திறனையுள்ளடக்கி மாவட்டரீதியாக தெரிவு செய்யப்பட்ட 5 மாணவர்களில் கொக்குளாய் அ.த.க பாடசாலை மாணவன் உ.சுரேஸ்குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத்தோடு கொழும்பில் நடைபெறுகின்ற தேசிய மட்டத் தெரிவுப் போட்டியிலும் மாவட்ட ரீதியாக இவர்கலந்து கொள்ளஇருக்கிறார். இந்தவகையில் இவரின் வெற்றிக்கு படிக்கற்களாக இருந்து வெற்றியீட்டிக் கொடுத்த கொக்குளாய் அ.த.க பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், நலனில் அக்கறைகொண்டோர் அனைவருக்கும் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி.11011)

காந்தரூபன் அறிவுச்சோலை
சிறுவர் இல்லம்

# வெளிநாட்டு இராணுவ ஆக்கிரமிப்பிலிருக்கும் ஈராக்கில் எவ்வாறு தேர்தலை நடத்த முடியும்?

### -ரஷ்ய சனாதிபதி விளாடிமிர் புட்டின்

(மொஸ்கோ)

**வெளிநாட்டு இராணுவத்தினால் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்பட்ட நாடாக ஈராக் இருக்கையில் அங்குபொதுத் தேர்தலை எவ்வாறு நடாத்த முடியும் என ரஷ்ய சனாதிபதி விளாடிமிர் புட்டின் கேள்வியெழுப்பியுள்ளார்.**




கிரெம்ளினில் ஈராக்கின் இடைக்கால பிரதமர் ஜியாத் அலாவியுடன் ரஷ்ய சனாதிபதி பேச்சுக்களை நடத்தியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்,வெளிநாட்டு இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப் பட்ட நாடாக ஈராக் இருந்து வருகின்றது. இந்நிலையில் அங்கு பொதுத் தேர்தலை எவ்வாறு நடாத்த முடியும் என்ற அவர், ஈராக்கின் ஸ்திரநிலையை மீண்டும் ஏற்படுத்துவதற்கு உதவமுடியும் என்றும், புனர் நிர்மாண நடவடிக்கைகளில் ரஷ்ய நிறுவனங்களும் ஈடுபட முடியும் என நம்பிக்கை தெரிவித்தார்.

அதேவேளை தேர்தல் சம்பந்தமான பாதுகாப்புச் சபையின் தீர்மானத்திற்கும் ரஷ்யா ஆதரவு தெரிவித்திருந்தமையும் அவர் அங்கு நினைவுபடுத்தினார்.

இதனிடையே இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஜேர்மனியின் நாசி இராணுவத்தையே சோவியத் வீரர்கள் அறுபத்து மூன்று வருடங்களுக்கு முன்னர் தோற்கடித்ததை நினைவுகூரும் நிகழ்ச்சியிலும் விளாடிமிர்புட்டின் கலந்து கொண்டார்.

இரண்டாவது உலக மகாயுத்த வீரர்களின் உடைகளை அணிந்து இரண்டாயிரத்து ஐநூறு ரஷ்ய வீரர்கள் தாக்குதல்களைப் பிரதிபலிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

## தேர்தலுக்குப் பின்னர் சதாம் மீது விசாரணை

அடுத்த மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்குப் பிறகே கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைன் மீது விசாரணை ஆரம்பிக்கப்படும் என்று ஈராக் போக்குவரத்துத்துறை அமைச்சர் லூயி ஹதிம் சுல்தான் அல்-அரிஸ் தெரிவித்தார்.



ஈராக்கின் றமாடி நகரில் தீவிரவாதிகளின் தாக்குதலில் தீப்பற்றியுள்ள ஈராக் பொலிசாரின் இரு ரோந்து நடவடிக் கைக்கார்கள்.

# சனவரி 30இல் ஈராக் பொதுத் தேர்தலை நடத்தி முடிப்பதில் உறுதியாக உள்ளோம்

### -புஷ், ஈராக் சனாதிபதி கூட்டாக அறிவிப்பு

(வோஷிங்டன்)

"ஏற்கனவே அறிவித்தபடி அடுத்த மாதம் 30ஆம் திகதி ஈராக் தேர்தலை நடத்தி முடிப்போம்" என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ், சனாதிபதி காஜி அல்யவார் ஆகியோர் உறுதி படக்கூறியுள்ளனர்.

ஈராக் இடைக்கால சனாதிபதி காசி அல்யவார் அமெரிக்கா சென்று இருக்கிறார். அங்கு வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் சனாதிபதி புஷ்சைச் சந்தித்தார். அப்போது திட்டமிட்டபடி சனவரி 30ஆம் திகதி அன்று தேர்தலை நடத்த வேண்டும் என்று புஷ்சிடம் வலியுறுத்தினார். அதன் பிறகு 2 பேரும் சேர்ந்து நிருபர்களுக்கு பேட்டி அளித்தனர். அப்போது அவர்கள் கூறியதாவது:-

ஏற்கனவே அறிவித்தபடி சனவரி 30ஆம் திகதி அன்று ஈராக் தேர்தலை நடத்தி முடிப்பது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். சில அரசியல்வாதிகள் தேர்தலை புறக்கணிக்க விரும்புகிறார்கள்.

அரசியல் நடைமுறைகள் உயிர் பெற்று விடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கும் சில சக்திகள் உள்நாட்டுப் போரைத் தூண்டி விடுகின்றன. ஆனால் அதை ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம். எங்கள் முயற்சியும், உழைப்பும் வீண் போகாது எனக் காட்ட விரும்புகிறோம் இந்த தேர்தலின் போது 100 சதவீத பாதுகாப்புக் கொடுக்க முடியாது. ஆனால் இந்தத் தேர்தல் மூலம் மக்கள் தீவிரவாதத்தை ஏற்கவில்லை சனநாயகத்தைத்தான் நேசிக்கிறோம் என்று உலகத்துக்கு காட்ட முடியும் இவ்வாறு இரு தலைவர்களும் கூறினார்கள்.

# 70 வீத எயிட்ஸ் நோயாளிகள் தெற்கு ஆபிரிக்க நாட்டினர்!

உலகில் உள்ள எயிட்ஸ் நோயாளிகளில் 70 வீதமானோர் தெற்கு ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று அக்ஷன் எயிட்ஸ் இன்டர்நஷனல் என்ற இணையத் தளம் தெரிவித்துள்ளது.

தெற்கு ஆபிரிக்க நாடுகளின் மொத்த மக்கள்தொகை உலக மக்கள்தொகையில் 2 சதவீதம் தான். ஆனால் உலகில் உள்ள எயிட்ஸ் நோயாளிகளில் 70 சத வீதம் பேர் இங்குதான் இருப்பதாக இந்த இணையத்தளத்தைச் சேர்ந்த நோரின் கலிபா என்ற பெண்மணி தெரிவிக்கிறார்.


ஆண்களை விட 15 வயது முதல் 24 வயதுடைய பெண்கள் தான் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். பெண்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லாததும், சமூக கலாச்சார சூழ்நிலைகளுமே இந்த அவல நிலைக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. எயிட்ஸ் நோயால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து பெண்களிடம் விரிவாக எடுத்துக் கூற வேண்டும். அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி உரிமைகளை மீட்டுத்தர வேண்டும். அப்போதான் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றார் கலிபா.



இஸ்ரேலில் கிர்யாட்கட் என்ற இடத்தில் பலஸ்தீன தீவிர வாதிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட மோப்ப நாய்களைக் கையாளும் இஸ்ரேலிய இராணுவ அதிகாரியின் கல்லறையில் அஞ்சலி செலுத்தும் சக இராணுவத்தினர்.

# பயங்கர மற்றும் இருண்ட அத்தியாயத்திலிருந்து புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கின்றோம்

### -பதவியேற்றபின் ஆப்கான் சனாதிபதி கருத்து



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் சனநாயக ரீதியில் நடத்தப்பட்ட சனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற ஹமீத் கர்சாய் (வயது-46) அந்நாட்டு சனாதிபதியாக செவ்வாய்க்கிழமை பொறுப்பேற்றார்.

தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடவும், போதை மருந்தைக் கட்டுப்படுத்தவும் சர்வதேச உதவி தொடர்ந்து அளிக்கப்படவேண்டும் என்று அவர் அப்போது கேட்டுக் கொண்டார்.

பதவியேற்பு விழாவுக்கு பாரம்பரிய உடையுடன் வந்த கர்சாயை அமெரிக்க துணைச் சனாதிபதி டிக் சென்னி, பாதுகாப்புத்துறை அமைச்சர் டொனால்ரம்ஸ்பீல்டு உள்ளிட்ட வெளிநாட்டு விருந்தினர் பலர் வரவேற்றனர். ஆப்கானிஸ்தான் தலைமை நீதிபதி பசல்ஹாதிஷின் வாரி அவருக்குப் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். அவருடன் நாட்டின் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் அகமது ஜியாமசூத், கரீம்கலீலி ஆகிய இருவரும் துணைச் சனாதிபதியாகப் பொறுப்பேற்றனர்.

பயங்கர மற்றும் இருண்ட அத்தியாயத்தில் இருந்து வெளிப்பட்டு வரலாற்றில் இன்றைக்கு புதிய அத்தியாயத்தைத் தொடங்கவுள்ளோம். என்று பதவியேற்ற பிறகு கர்சாய் தெரிவித்தார்.

இதற்கிடையே அதிகாரத்தில் இருந்து தூக்கியெறியப்பட்ட தலிபான்களுடன் திங்கட்கிழமை இரவு அரசுப்படைகள் கடுமையாக மோதின. இதில் 6 தலிபான்கள் கொல்லப்பட்டனர். ஆப்கான் பாகிஸ்தான் எல்லையருகே இந்தச் சண்டை நடந்தது. தலிபான் தீவிரவாதிகள் சுமார் 200 பேர் இந்தச் சண்டையில் ஈடுபட்டனர். 6 தலிபான்களும், அரசுப்படைவீரர்கள் நாலுபேரும் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இராணுவ ஆட்சிக்கு முடிவுகட்ட வேண்டும்

### -முன்னாள் பிரதமர் நவாப் ஷெரிப்

(இஸ்லாமபாத்)

"பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்புடன் எந்தவித ஒப்பந்தத்தையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை" என அந்நாட்டின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் தெரிவித்தார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன் பாகிஸ்தான் பிரதமராக இருந்தவர் நவாஸ் ஷெரிப். அப்போது இராணுவத் தளபதியாக இருந்த முஷாரப் ஆட்சியைக் கைப்பற்றி நவாஸ் ஷெரிப்பைக் குடும்பத்துடன் நாடு கடத்தினார். தற்போது நவாஸ் ஷெரிப் சவுதி அரேபியாவில் தஞ்சம் புகுந்துள்ளார்.

பெனாசிர் தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் நவாஸ் ஷெரிப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளுடன் முஷாரப் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அதன்படி பாகிஸ்தானில் உள்ள சட்டசபைகளைக் கலைப்பது, புதிய தேர்தலை நடத்துவது, இராணுவத் தளபதி பதவியில் முஷா ரப்பே நீடிப்பது என்று இருதரப்பிலும் உடன்பாடு ஏற்பட்டதாகச் செய்திகள் வெளியாகின. இந்தத் தக வல்களை நவாஸ் ஷெரிப் மறுத்துள்ளார்.

பாகிஸ்தானில் சர்வாதிகார ஆட்சியை நீக்க எனது கட்சி தொடர்ந்து பாடுபடும். முஷாரப்புடன் எனது கட்சி ஒப்பந்தம் செய்திருந்தால் நானும் எனது குடும்பத்தினரும் வெளிநாட்டில் தஞ்சம் புகுந்து இருக்கவேண்டிய அவசியமே இருந்திருக்காது. ஒருநாட்டின் நிர்வாகத்தில் இராணுவம் தலையிட்டால் சனநாயகம் அழிந்து போய்விடும். பாகிஸ்தானில் வளர்ச்சியும், மறுமலர்ச்சியும் ஏற்பட இராணுவ ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும என்றும் அவர் கூறினார்.

# முஷாரப்பைப் பதவியிலிருந்து அகற்ற எதிர்க்கட்சிகள் நடவடிக்கை

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் சனாதிபதி பதவியிலிருந்து முஷாரப் விலக வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. ஜனநாயக மீட்புக் கூட்டணி சார்பில் முஷாரப்புக்கு எதிரான முதலாவது பொதுக் கூட்டம் பத்கேலாவில் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

"முஷாரப் பதவி விலக வேண்டும் என்ற ஓரம்ச திட்டத்தின் அடிப்படையில் இயக்கத்தைத் தொடங்கி இருக்கிறோம். அவர் பதவி விலகும் வரை இது தொடரும்" என கூட்டணித் தலைவர் மக்தூம் அமின் பாஹிம் தெரிவித்தார்.இவர் முன்னாள் பிரதமர் பெனாசிர் புட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர். ஆறு கட்சிகளைக் கொண்ட இந்தக் கூட்டணி, பாகிஸ்தானின் முக்கிய நகரங்களில் முஷாரப்புக்கு எதிரான போராட்டங்களை அறிவித்துள்ளது. மூல்தான் நகரில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது.




கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் பளைப் பிரதேச செயலர் பிரிவில் பாதிக்கப்பட்டு தற்காலிக வதிவிடங்களில் தங்கி உள்ள மக்களுக்கு டாக்டர் குணரத்தினம் தலைமையிலான செஞ்சிலுவைச் சங்க மருத்துவ உதவிக்குழுவினர் கடந்த 6 ஆம் திகதி அன்று நேரில் சென்று மருத்துவ உதவிகள் வழங்கியுள்ளனர். அத்துடன் தற்காலிக வதிவிடங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு படுக்கை விரிப்பு, சவற்காரங்கள் என்பன செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்பட்டன. மேலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான அத்தியாவசியமான உணவல்லாத பாவனைப் பொருட்கள், கூரை விரிப்புக்கள் என்பவற்றை பெற்று வழங்க தேவையான நடவடிக்கைகளை சங்கத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். (சோ,சு)

# கனமழை, வெள்ளப் பாதிப்பால் வன்னியின் பல்வேறு இடங்களிலும் மக்கள் இடப்பெயர்வு

(அலுவலக செய்தியாளர்)

**அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக வன்னிப் பெருநிலப் பரப்பிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள் பல வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இதன் காரணமாக பல குடும்பங்கள் இடம் பெயர்ந்து ஆலயங்கள், பாடசாலைகள், பொது மண்டபங்களில் தங்கியுள்ளன.**

கிளிநொச்சி-பச்சிலைப்பள்ளி பளைப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள கச்சாவெளிக் கிராமம் வெகுவாக வெள்ளத்தினால் பாதிப்புக்குள்ளாகியதன் விளைவாக அக்கிராமத்தைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்து பொது இடங்களில் தங்கியுள்ளன. இவர்களுக்கான சமைத்த உணவினை வழங்கும் நடவடிக்கைகளை பளைப் பிரதேச செயலர் மேற்கொண்டு வருகின்றார்.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக ஜெயபுரம் பல்லவராயன் கட்டு கிராமம் வெகுவாகப் பாதிப்பிற்குள்ளாகியுள்ளதுடன் மக்கள் இடம் பெயர்ந்து பொது இடங்களில் தங்கியுள்ளனர்.

மழை வெள்ளம் காரணமாக மேற்படி கிராமத்தைச் சேர்ந்த 132 குடும்பங்கள் இடம் பெயர்ந்து பல்லவராயன் கட்டு 3 ஆம் இலக்க பாடசாலையில் தங்கியதாகவும் மேற்படி 132 குடும்பங்களைச் சேர்ந்த 530 அங்கத்தவர்களுக்கான சமைத்த உணவினை பூநகரி பிரதேச செயலரின் வேண்டுகைக்கமைவாக கரியாலை நாகபடுவான் அபிவிருத்தி நிறுவனத்தினர் வழங்குகின்றனர்.

பூநகரி நாச்சிக்குடா கிராமத்தில 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிப்புக்குள்ளான நிலையில் இடம் பெயர்ந்து பொது இடங்களில் தங்கியுள்ளன. இவர்களுக்கான உதவிகளை பொது நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் 19 கிராமங்களைச் சேர்ந்த 958 குடும்பங்கள் வெள்ளப்பாதிப்பின் காரணமாக இடம் பெயர்ந்து பொது இடங்களிலும் ஆலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளன. இவர்களுக்கான உதவிகள் வழங்கும் நடவடிக்கையினை புதுக்குடியிருப்புப் பிரதேச செய்லர் மேற கொண்டு வருகின்றார்.

மற்றும் மேற்படி கிராமங்களிலுள்ள 2448 ஏக்கர் வயல் நிலங்களும்,3623 ஏக்கர்மேட்டுநிலப்பயிர செய்கை நிலங்களும் வெள்ளப் பாதிப்பிற்குள்ளாகியுள்ளதாக புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். மேலும் மழை வெள்ளம் வீதிகளை ஊடறுத்து பாய்ந்ததன் காரணமாக வன்னிப் பிரதேசத்தின் பல போக்குவரத்து வீதிகள் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன. இதன் காரணமாக போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளதுடன் பல வீதிகள் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது. பிரதேச செயலர்கள் அந்தந்த மாவட்ட அரச அதிபர்களிடம் நிலைமைகளைத் தெரியப்படுத்தியுள்ளனர். (சோ,சு)

# கிளி.மாவட்ட தே.எ.பேரவையின் புதிய நிர்வாகம் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயற்குழுக் கூட்டம் கடந்த 5ஆம் திகதியன்று கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலர் சு.பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் பின்வருவோர் கிளி.பிரதேச போர் எழுச்சி செயற்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். செயலர் இ.பரஞ்சோதி துணைச் செயலர் ஆ.சிவனேசன், பொருளாளர். இ.இரத்தினமணி, மற்றும் 7 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் திருமாறன் மேற்படி தெரிவில் கலந்து கொண்டு பேரவையின் செயற்பாடுகள் குறித்து கருத்துரை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## ஒளிவிழா

கிளி/கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலய ஒளிவிழா மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழாவும் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய முதல்வர் ம.உமாசங்கர் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில், கிளிநொச்சி கரைச்சிக் கோட்டக் கல்வி அலுவலர் திருமதி. இ.அரியரத்தினம் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை கிளிநொச்சி இந்துக்கல்லூரியிலும் அண்மையில் ஒளிவிழா இடம் பெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி முல்லைத்தீவு குருமுதல்வர் தேவசகாயம் அடிகளார் மற்றும் அமலதாஸ் அடிகளாரும் கலந்துகொண்டனர். (சோ)

# முடிவுத் திகதி மாற்றம்

(அலுவலக செய்தியாளர்)

அறிவுக்கதிர் அறிவியல் சஞ்சிகை ஆய்வுக் கட்டுரைப் போட்டியின் ஆக்கங்கள் அனுப்பி வைப்பதற்கான முடிவுத் திகதியில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனடிப்படையில் எதிர்வரும் சனவரிமாதம் 31 ஆம்திகதி வரை மேற்படி ஆய்வுக்கட்டுரைப் போட்டிக்கான ஆக்கங்களை அனுப்பி வைக்கலாமென அறிவுக்கதிர் சஞ்சிகையின் ஆசிரியர் தெரிவித்துள்ளார். (சோ)

# எயிட்ஸ் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையினரால் உலக எயிட்ஸ் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட திறந்த கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களின் பெயர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கு முறையே ரூபா. 5000.00, 3000.00, 2000.00 பணப்பரிசில்களும் மேலும் 10 பேருக்கு சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேற்படி பரிசில்கள் வழங்கும் வைபவம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

வெற்றி பெற்றோர் பெயர் விபரம்:

1.ஆம் இடம் :- திருமதி. மீனலோஜினி இதயசிவதாஸ் இல.34/1, சிவநகர், உருத்திரபுரம் , கிளிநொச்சி.

2.ஆம் இடம்:- செல்வி சுபாமதி கணபதிப்பிள்ளை "தேவி வாசா" மீசாலை வடக்கு, மீசாலை.

3.ஆம் இடம்: டர்லின் நீருஜா சத்தியநேசன், 26/1, மடம் வீதி யாழ்ப்பாணம்.

சான்றிதழ் பெறுவோர் விபரம்

1. திருமதி.மாலாதேவி மதிவதனன் மங்குனியன் வளவு, அளவெட்டி மத்தி அளவெட்டி.

2. செல்வி.ராதிகா பொன்னம்பலம், அல்லாரை வீதி மீசாலை கிழக்கு மீசாலை.

3. மாரிமுத்து பரமேஸ்வரன், அன்னை இல்லம், 87 கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சி.

4. திருநீலகண்டன் கோவிந்தராசன், காவல் பணிமனை, வட்டக்கச்சி.

5. சு.சுபோஜினி. இராமநாதபுரம் கிளிநொச்சி

6.செல்வி.ரஜீபா இரத்தினம் 43/1, கணேசபுரம் கிளிநொச்சி.

7.இருதயதாசன் பேட்மன் நோயல், மகாவித்தியாலயம் அருகாமை அக்கராயன்.

8. செல்வி கு. சுகந்தினி, பெரிய அரசடி, ஆசிரியர் வீதி, சாவகச்சேரி.

9. திருமதி. செல்வமலர் பஞ்சலிங்கம் உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு.

10. திருமதி. நாகரூபினி சிவரஞ்சன் வன்னேரிக்குளம், கிளிநொச்சி. (சோ)

## அவசர கலந்துரையாடல்

2005 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்களை இனம் காணுவது சம்பந்தமான விசேட கலந்துரையாடல் ஒன்று அவசராமாக நாளை வெள்ளிக்கிழமை முல்லை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. சகல அங்கத்துவ நிறுவனங்களினதும் இணைப்பாளர்கள், திட்ட இணைப்பாளர் ஆகியோரை இதில்தவறாது கலந்து கொள்ளுமாறு இணையத் தலைவர் வே.சிவனடியார் வேண்டி நிற்கின்றார். (08,20)

# இறம்பைக்குளம் மகளிர் ம.வி.இல் மனித உரிமைகள் தினம்

(வவுனியா செய்தியாளர்)

இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை மனித உரிமைகள் தினம் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

பாடசாலை அக்குவைனஸ் கேட்போர் கூடத்தில் காலை 11.00 மணிக்கு அதிபர் அருட் சகோதரி ஜெயநாயகி தலைமையில் இம் மனித உரிமைகள் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதில் "மனித உரிமைகள்" என்ற தலைப்பில் வவுனியா மாவட்ட நீதிபதி M.இளஞ்செழியன் சிறப்புரையாற்றவுள்ளார்.இதில் தரம்-09 தொடக்கம் தரம்-13 வரையான மாணவிகள் கலந்துகொள்ளவுள்ளனர். (10)



கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் திடீரென வீசிய காற்றின் காரணமாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக இருந்த வேப்பமரம் முறிந்து விழுந்ததில் வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை கூடம் சிறிது சேதமடைந்ததைப் படத்தில் காணலாம்.

(படம்-சோதி)

# யாழ்.மாநகர சபை ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு தொடர்கிறது!

## -பாதுகாப்பான சூழலை உருவாக்க வற்புறுத்து

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாநகர சபை ஊழியர்கள் ஒன்றுதிரண்டு நல்லூரில் உள்ள மாநகர சபை அலுவலகம் முன்பாக மறியல் போராட்டம் ஒன்றில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.**



யாழ். குருநகர்- திருநகர் பகுதிகளைச் சேர்ந்த இரு வேறு குழுவினர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள மோதல் நிலைமையால் உருவாகியுள்ள பதற்ற நிலையைத் தொடர்ந்து அப் பகுதிகளில் சென்று சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபடும் யாழ். மாநகர சபையின் சுத்திகரிப்பு ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் காரணமாக அப்பகுதிகளுக்குச் சென்று சுத்திகரிப்பு செய்யும் பணிகளை கடந்த மாதம் 29ஆம் திகதி முதல் யாழ். மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் இடைநிறுத்தியுள்ளனர்.

எனினும் இது குறித்து மாநகர சபையின் நிர்வாகம் திருப்திகரமான நடவடிக்கைகளை எடுக்காமையைக் கண்டித்து பணிப்புறக் கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களுடன் ஏனைய ஊழியர்களும் இணைந்து யாழ். மாநகர சபை அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக யாழ். மாநகர சபையின் பணிகள் நேற்று முன் தினம் முழுவதும் ஸ்தம்பிதமடைந்தன. இதனையடுத்து உயர் அதிகாரிகள், ஊழியர்கள் தரப்பினருடன் நடத்திய பேச்சுவார்த்தை யைத் தொடர்ந்து மறியற் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டாலும் பணிப் புறக்கணிப்பு தொடர்கிறது. (27)(33)

# காணாமற் போனோர் குறித்த விசாரணை சனவரி 5 வரை ஒத்திவைப்பு

யாழ்.குடாநாட்டில் படையினரால் கைதாகிக் காணாமற் போனோர் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்களின் மீதான விசாரணைகளுக்காக நேற்று முன்தினம் பாடசாலை மாணவி செல்வி கிருசாந்தி கொலை வழக்கில் குற்றவாளியாக இனம் காணப்பட்டகோப்ரல் ராஜபக்ஷ யாழ். மேல்நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

ராஜபக்ஷவுக்கு எதிரான ஆட்கொணர்வு மனுக்களில் 6 மனுக்கள் மீதான விசாரணைகளுக்காக அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து படையினரதும், பொலிசாரினதும் பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்டு மேல்நீதிமன்ற நீதவான் எஸ். வரதராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட இவர், தன் தரப்பிற்கு ஓர் சட்டத்தரணியை நியமித்து விட்டதாகவும் இருப்பினும் தன் தரப்புவாதங்கள் குறித்து அவருடன் ஆலோசிக்க வேண்டியிருப்பதாலும் சிறிது கால அவகாசம் தேவை எனக்கோரினார்.

இதனையடுத்து இவர்சம்பந்தமான வழக்குகளை நீதிபதி வரதராஜா சனவரி மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் அன்றைய தினம் சட்டத்தரணி சமுகமளிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார். (27,33)

# கோயிலாமனை கிராமத்தின் அபிவிருத்திக்கு வலியுறுத்து

(தென்மராட்சி)

அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாமல் கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள கோயிலாமனை கிராமத்தில் உடனடியாக அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள துரித கால நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எண்பது சதவீதம் விவசாயிகளைக் கொண்ட இக் கிராமமானது கடந்த கால இராணுவ நடவடிக்கையால் விவசாய நிலங்கள் எல்லாம் படை முகாம்களாக மாற்றப்பட்டதால் விவசாயத்தை நம்பியிருந்த இப்பகுதி மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வந்தார்கள் என்றும் கடந்த மாதம் பிற்பகுதியில் இப் பகுதியில் இருந்த படைமுகாம் எடுக்கப்பட்டும் இப் பகுதியில் இருந்த விளைநிலங்கள் மண் அணைகளாகவும் மாற்றப்பட்டும், கேணிகள் தூர்க்கப்பட்டும் உள்ளதால் இவற்றை அவசரகால நடவடிக்கையாக புனரமைத்து தரும்படி மக்கள் கோரியுள்ளனர். (28)

# மின்சாரத்தில் சிக்கி யானை மரணம் சந்தேக நபர் பொலிசாரால் கைது

## -மக்கள் மத்தியில் பெரும் விசனம்

(செட்டிகுளம்)

செட்டிகுளம் முகத்தான் குளம் பண்ணை-2 கிராமத்தில் கிராம வாசி வைத்த மின்சாரம் தாக்கி ஒரு காட்டு யானை இறந்துள்ளது. மின்சாரம் வைத்த சந்தேக நபர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றார். கடந்த வெள்ளிக் கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது இவ்வாறிருக்க கடந்த சில வாரங்களுக்கு முன்னர் செட்டிகுளம் பிரதேசத்தில் பொலிசாரின் காவலரண் பகுதிக்கு சட்ட விரோதமாக எடுக்கப்பட்ட மின்சாரத்தில் தாக்கப்பட்டு இரண்டு காட்டு யானைகள் இறந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த மின்சார தாக்குதல் சம்பவம் தொடர்பாக வனவள துறையினர் பொலிசாருக்கு எதிரான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பதும் எனினும் இம்முறை இறந்த யானை தொடர்பாக ஊர்வாசி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளமை பிரதேச வாசிகளின் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இறந்த யானை விவசாயிகளுக்குப் பெரும் இடைஞ்சலாக இருந்தது என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (21)

-யாழ். குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும்-

# டென்மார்க் நிறுவனப் பணியாளர் இருவர் முகமாலையில் படையினரால் கைது

யாழ்.குடாநாட்டில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள டென்மார்க் நிறுவனமொன்றில் பணியாற்றும் உள்ளூர் பணியாளர்கள் இருவர் திங்கட்கிழமை மாலை முகமாலையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் பயணம் செய்த வாகனம் முகமாலை சோதனைச் சாவடியில் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது சாரதியின் ஆசனத்திற்குக் கீழ் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் சில வெடிபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எம்-72 ரக கண்ணி வெடி-1 மற்றும் 4 மிதிவெடிகள் ஆகியன கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்டுள்ள வாகன சாரதி உட்பட இருவரும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு தற்போது நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (27)

# விவசாயம், கால் நடைவளர்ப்பு பயிற்சி நெறி ஆரம்பம்

கிளிநொச்சி பொருண்மிய மதியுரையகத்தினால் ஐ.ஐ.ஒ நிறுவன நிதி உதவியுடன் கடந்த 1 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட உருத்திரீஸ்வரபுரத்தில் 20 பயனாளிகளுக்கான விவசாயம் கால்நடை வளர்ப்புத் தொடர்பான பயிற்சி வகுப்பொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 15 நாட்களுக்கு இப் பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளது. இப்பயிற்சியின் மூலம் இக் கிராமத்தைச் சேர்ந்த 10 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களும், 14 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட 10 பயனாளிகளும் பயன்பெறவுள்ளனர்.

இந்நிகழ்வின் ஆரம்ப வைபவம் இக்கிராமத்தில் உள்ள கானகன் முன்பள்ளியில் காலை 11.00 மணியளவில் ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் தலைமையுரையினை நிறுவன மாவட்ட இணைப்பாளர் விஜேந்திரா வழங்கினார். அதனைத் தொடர்ந்து சிறப்புரைகள் கருத்துரைகள் நடைபெற்றன. இதன் பின் பயிற்சி வகுப்பினை இம்மாவட்டக் கால்நடை வைத்தியர் கௌரிதிலகர் ஆரம்பித்து வைத்தார். இதன் போது அவர் கால்நடை வளர்ப்புத் தொடர்பாக பல கருத்துக்களை வழங்கினார். இதனைத் தொடர்ந்து நிறுவனத்தின் திட்ட அலுவலர் பிரதாப் விவசாய நடவடிக்கைகளுக்கான பயிற்சிகளை ஆரம்பித்து வைத்தார்.

இதன் போது நிறுவனத் திட்ட இணைப்பாளர் டாக்டர் மனோகரன் மற்றும் மன்னார் மாவட்ட இணைப்பாளர் கி.பிரபாகரன், கிளிநொச்சி மாவட்ட வெளிக்கள அலுவலர் அ.சிவலிங்கம், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர், செயலாளர் ஆகியோருடன் பெருமளவான மக்களும் கலந்துகொண்டனர். இந்நிகழ்வானது கிராம அபிவிருத்தி சங்க செயலாளரின் நன்றி உரையுடன் நிறைவு பெற்றது.

# மீள் குடியமர்வு கொடுப்பனவை விரைவாக வழங்க நடவடிக்கையெடுக்கக் கோரல்

## -துவரின் போராட்டம் நடத்த முயற்சி

(தென்மராட்சி)

கைதடிப் பிரதேசத்தின் பல பகுதிகளில் 2002 ஆம் ஆண்டு இரண்டாம் மாதத்திற்கு பிறகு சமாதான சூழ்நிலைக்கு மத்தியில் இப் பகுதியில் மீளக்குடியமர்ந்த 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்குவதாக அரசினால் உறுதியளிக்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா நிதி இதுவரை அரசினால் வழங்கப்படவில்லை.

ஆனால் இந்த நிதி வழங்குவதற்கான படிவங்களில் அரச உத்தியோகத்தர்களால் மக்களிடம் கையெழுத்துப் பெறப்பட்டு ஒரு வருடத்துக்கு மேல் கடந்து விட்ட நிலையில் இந்த நிதி இதுவரை வழங்கப்படாமையைக் கண்டித்தும் பாதிக்கப்பட்டு நிர்க்கதி அற்ற நிலையில் வாழும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக இந்த நிதியை வழங்கக் கோரி பொதுமக்களும் பொது அமைப்புக்களும் இணைந்து போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாக கைதடி பொது அமைப்புக்களின் தலைவர் கந்தசாமி தெரிவித்துள் ளார்.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் விரிவான முறையில் செய்யப்படுமென அவர் தெரிவித்தார். (28)

# மரக்கன்று வழங்கல்

செட்டிகுளம் முகத்தான் குளம் பண்ணை 2 பிரதேச வாசிகளுக்கு நிகொட் திட்டத்தின் கீழ் பயன் தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றது. நீண்டகால இடப் பெயர்வின் பின்னர் மீளக் குடியமர்ந்து வரும் மக்களின் நீண்ட கால நன்மை கருதி இந்தக் கன்றுகள் வழங்கப்படுவதாக நிகொட் நிறுவனம் தெரிவிக்கிறது. நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் போரூட் நிறுவனத்தால் செயற்படுத்திவரும் இத்திட்டத்தின் கீழ் இக் கிராமத்தின் வீதிகளும் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கிராமத்தில் வாழ்ந்து வரும் 120 குடும்பங்கள் இத் திட்டத்தின் கீழ் பயன் பெற்று வருகின்றன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 2 தென்னங்கன்று, 2 மாங்கன்று, 2 பலாக்கன்று, ஒரு கொய்யா, ஒருதேசி என்ற வீதத்தில் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## தொழிற்கல்வி கண்காட்சி

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தொழிற் கல்வி கண்காட்சி நடைபெறவுள்ளது.

கனேடிய உலகப் பல்கலைக் கழக சேவை நிறுவனமும் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும், இணைந்து நடாத்தும் மின்னொட்டு மரவேலை ஆகிய பயிற்சிகளைப் பெற்று வெளியேறும் மாணவர்களினால் உற்பத்தி செய்த பொருட்கள் கண்காட்சிக்காக முத்துஐயன்கட்டு வலதுகரையில் உள்ள புனித பூமி சிறுவர் இல்லத்தில் 10.12.2004 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது. (05)



யாழ்.சக்தி தொலைக்காட்சி நிறுவனத்தின் அலுவலகம் மீதான தாக்குதலில் சேதமடைந்த பகுதியொன்றை படத்தில் காண்க. (27)

அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஆட்சியாளர்கள் ஏற்படுத்திக் கொண்டுள்ள பிணக்குகளினால் இருபது வருட கால யுத்தத்தின் பலனாக பாரிய மனித உயிர் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் கோடிக்கணக்கான உடமைகள் நாசமாக்கப்பட்டுள்ளன. இதனால் பொருளாதாரம், மனித வர்க்கத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள் கணக்கில் அடங்காது.



யுத்த நிறுத்தங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் அரசியல் போராட்டங்கள் நாட்டின் இனத்துவேசங்கள் முடிவடையவில்லை. நாட்டின் இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு என்பது கட்சிகளின் அதிகார வரம்பிற்குள் முடக்கப்பட்டு இனப்பிரச்சினையை மேலும் தீவிரமாக்கி அரசியல் லாபம் ஈட்டுவதற்கு மக்களை மடையர்களாக்குவதே தற்போதைய அரசின் நோக்கமாகும்.

செய்து கொண்டார்.

அவர் பதவி இழந்து எதிர்க்கட்சித் தலைவராகிய பொழுதும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முழு ஆதரவையும் வழங்கப் போவதாகக் கூறினார். இது நாட்டின் நலன் கருதி எடுக்கப்பட்ட நடவடிக்கை இந்த நடவடிக்கைக்கு தற்பொழுது ஏன் எதிர்ப்பு தெரிவிக்கின்றார். இது கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் முரண்பாடா? அப்படியானால் இந்த முரண்பாடுகளைக் கைவிட்டு மீண்டும் பழைய நிலைக்கு வரவேண்டும் என்பதே எமது அவா.

அரசாங்கம் சமாதான முன்னெடுப்புகளை முன்னெடுத்துச் செல்வதற்கு எதிர்க்கட்சியின் அனுசரணையை நாடினால் தற்போதைய நிலையில் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவது நாட்டுக்கு நல்ல பலனைக் கொடுக்கும். அப்படி இல்லாமல் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவு வழங்க மாட்டோம் என்று கூறினால் அது அவரின் அரசியல் லாபம் கருதி எடுக்கப்பட்டுள்ள ஒரு செயல் எனக் கருதவேண்டியுள்ளது. இதற்கு முன்னதாக நாட்டில் உள்ள தலைவர்கள் இதையே செய்துள்ளார்கள். அதனால் இந்த நாடு இன்று பயங்கர பாதாளத்தில் தள்ளப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடுகளினால் பேச்சுவார்த்தைகளில் இருந்து பின் வாங்குவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த நடவடிக்கைகளால் தமிழர்களும் விடுதலைப்புலிகளும் பெரும்பான்மை சிங்கள மக்களிடம் இருந்து அந்நியப்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

குறுகிய அரசியல் நோக்கங்களினால் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலையை நன்கு உணர்ந்த சர்வதேச சமூகம் தமிழர்களின் கோரிக்கைகள் போராட்டங்கள், நியாயமானதென்பதை தற்பொழுது உணரத் தொடங்கி உள்ளது. இது சிங்களவர்களுக்கும், சிங்கள அரசியல் தலைமைப் பீடங்களுக்கும் பெரும் ஆபத்தை உண்டு பண்ணும், சிங்களவர்களும், சிங்களத் தலைமைப்பீடமும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு சரியானதொரு பதிலை இதுவரை கூறவில்லை. என்பதை சர்வதேச சமூகம் உணரத்தொடங்கினால் அது இலங்கை நாட்டுக்கு நல்லதல்ல அரசாங்கம் தமது சுய நலத்திற்காக இப்பொழுது பாடுபடுகின்றது. எப்படியாவது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். இதுவே இன்றைய அரசாங்கத்தின் கொள்கையாகும்.

அரசியல் லாபங்களைப் பெறுவதற்கே இன்று அரசாங்கம் வேலைத் திட்டங்களை மிகத் தெளிவாகவும், ஆக்க பூர்வமாகவும் சுட்டிக் காட்டியுள்ளார். மீண்டும் அவர்கள் விடுதலைப் போராட்டத்தில் இறங்கப் போவதாகக் கூறியுள்ளார். இந்தச் சுதந் திரப் போரை இரண்டு மார்க்கங்களாக நடத்தலாம். ஒன்று மக்களை அரசியலில் இணைத்துக் கொள்ள



இரண்டு படிப்படியாக ஆயுதமுனையில் யுத்தத்தை மேற் கொள்வது: தென்னாபிரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் சுதந்திரத்தைப் பெறுவதற்கு மக்களை அரசியலில் இணைத்துக் கொண்டு போராடினார்கள். ஆகவே விடுதலைப் புலிகள் இந்த இரண்டு மார்க்கங்களையும் இணைத்துக் கொண்டு விடுதலைப் போராட்டத்தில் இறங்கலாம். பிரபாகரன் விடுதலைப் போராட்டத்தை மீண்டும் ஆரம் பிக்கப் போகின்றார் என்று இப்பொழுது நாட்டில் உள்ள மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளார்கள்.

# தமிழரின் கோரிக்கைகள் நியாயமானதென சர்வதேச சமூகம் உணரத்தொடங்கியுள்ளது

சமாதானப் பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் முன்னெடுத்துச் சென்றால் அதற்கு ஒத்துழைப்பைத் தருவதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கும் பாராளுமன்ற அங்கத்தவர்களை தற்போதைய அரசு விலை கொடுத்து வாங்குகின்றமையால் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு ஆதரவு தருவதிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி விலகியுள்ளதாக அறிவித்துள்ளது. இது சம்பந்தமாக தேசிய சமாதான சபையின் பேராசிரியர் ஜெகான் பெரேரா சில கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவு வழங்கப் போவதில்லையென்று ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளமை எமக்கு சந்தேகத்தை உண்டு பண்ணியுள்ளது. இது உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்ட அறிக்கையா அல்லது தனிநபரினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையா என்பது சந்தேகமாக உள்ளது. சந்தேகப்படுவதற்கு காரணங்கள் உள்ளன. கடந்த ஐந்து வருட காலங்களில் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை கைப்பற்றியது தொடக்கம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினை சம்பந்தமாகக் கடைப்பிடித்து வந்த கொள்கைகளை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. ரணில் விக்கிரமசிங்க எதிர்ககட்சித்தலைவராக இருக்கும் பொழுதும் மக்களை யுத்தத்திற்கு தயார்ப்படுத்தவில்லை. சமாதானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அவர் நாட்டின் பிரதமராகிய பொழுது நாட்டின் ஒரு வீரனாக முன்வந்து யுத்தத்தை நிறுத்தினார். போர் நிறுத்த ஒப்பந்தத்தை விடுதலைப்புலிகளோடு விடுதலைப்புலிகளும் தமிழ் மக்களும் நாட்டின் தலைவர்களிடத்தில் சந்தேகம் கொண்டுள்ளமை சாதாரணமாகும். இதையும் நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம் அரசியல் லாபம் கருதி சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவு வழங்காவிட்டால் இது நாட்டுக்குச் செய்யும் ஒரு துரோகம் ஆகும்.

ஜே.வி.பியினர் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதைப் பற்றி நாங்கள் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. காரணம் அதிகாரப் பரவலாக்கலுக்கு அவர்கள் எதிரானவர்கள்ஆகவே அவர்களின் கூற்று அவர்களுக்குப் பொருந்தும், ஏனையோர்களுக்கு பொருந்தாது. "தமிழர்களுக்கு நாட்டில் பிரச்சினைகள் குறைவு, விடுதலைப்புலிகள் நாட்டைப் பிரிப்பதற்கு முயற்சிக்கின்றபடியால் அவர்களுடன் தொடர்புகள் வைக்கலாகாது" என்ற கொள்கையுடைய ஜே.வி.பி சமாதானபபேச்சு வார்த்தைகளை எப்படி ஏற்றுக்கொள்ளும்? அவர்கள் பேசுவதும், செய்வதும் குறுகிய நோக்கம் கொண்டவையாகும். தமிழ், சிங்களம், முஸ்லிம், மலேசியர் மற்றும் ஏனையோர்கள் வாழும் நாடு இது. இந்த நாட்டிற்கு ஜே.வி.பியின் கொள்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை அல்ல.

ஜே.வி.பியின் குறுகிய நோக்கங்கள் ஐக்கிய தேசியக் கட்சியிடம் கிடையாது. பெரும்பான்மை, சிறுபான்மையினர்கள் வாழும் இந்த நாட்டில் அவர்களின் அரசியல் நடவடிக்கைகளை நாட்டுக்கு ஏற்றபடி காய் நகர்த்தலை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். பரந்த அரசியல் நோக்கம் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி சமாதானப் முன்னெடுத்துச் செல்கின்றது. அதே போல் ஐக்கியக் தேசியக் கட்சியும் தனது அரசியல் லாபம் கருதி பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் சென்றது. அப்பொழுது ஐக்கிய தேசியக்கட்சியில் சந்திரிகாவின் ஆட்சியில் இருந்த ஐந்து அமைச்சர்கள் இணைந்து கொண்டனர். அதிகார மோகத்தையும் இனப்



பிரச்சினைத் தீர்வையும் நாங்கள் வேறு வேறாக வைப்போம். அரசியல்வாதிகள் எப்பொழுதும் பதவியில் இருப்பதற்கும் ஆட்சி செய்வதற்கும் விரும்புவார்கள். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு சதித் திட்டங்கள் செய்வார்கள். நாட்டு மக்களுக்கு நன்மைகள் செய்வது போல் நடிப்பார்கள். இவைகளை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். இந்தக் குறுகிய லாபங்களைப் பெறும் நோக்கில் இனப்பிரச்சினையைத் தட்டிக் கழிப்பார்களானால் இதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. மாவீரர் தின உரையில் திரு பிரபாகரன் அவர்கள் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு என்பதை

சமாதானப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள மாட்டோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி அமெரிக்க அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது. அரசியலில் அவர்களின் பலவீனம் நன்கு புலனாகிறது. அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். அரசியல் நாகரிகம் அவர்களுக்கு நன்கு தெரியும். அப்படி ரணில் செய்வாரானால் உலகம் எமது நாட்டுத் தலைவர்களை தலைவர்களாக ஏற்றுக் கொள்ளமாட்டாது. எந்த ஒரு சனநாயக நாட்டிலும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படும் பொழுது சிறுபான்மையினரின் ஆதரவும் இல்லாமல் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. வட அயர்லாந்து, இங்கிலாந்து, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளை எடுத்துக் கொண்டால் சிறுபான்மையினரின் ஆதர வுடன் அங்கு இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டது. எமது நாட்டில் இந்தப் பரந்த மனப்பான்மை கிடையாது. குறுகிய நோக்கத்துடன் செயற்படுகின்றமையால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நிரந்தரமான முடிவைக் காணமுடியாமல் இருக்கின்றது.

எப்படி இருந்தாலும் இப்போது ஐக்கிய தேசியக் கட்சி சமாதானம் சம்பந்தமாக அரசுக்கு ஆதரவளிக்க வேண்டும். இல்லையேல் நாட்டில் பெரும் அரசியல் பிரச்சினைகள் ஏற்பட்டு நாடு மறுபடியும் பயங்கர அழிவைச் சந்திக்கும். நாட்டின் நலன் கருதி ஐக்கிய தேசியக் கட்சியினர் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

ஜெகான் பெரேரா (லங்காதீப)
தமிழில் அ. சக்திவேல்

# ரெலிக்கொம் நிறுவனத்தின் நடவடிக்கை வவுனியா மக்களை விசனத்திற்குள்ளாக்குகிறது

(செட்டிகுளம்)

ரெலிக்கொம் நிறுவனத்தின் சேவை அண்மைக் காலமாக வவுனியா வாழ் மக்களுக்கு பெரும் பிரச்சினையாக இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். பணம் செலுத்தவில்லை என்றால் தொடர்பைத் துண்டிக்கும் நிறுவனம் பணம் செலுத்தி சில வாரகாலமாகியும் தொடர்பைக் கொடுக்காத நிலை இருப்பதாகவும் பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அண்மைக் காலமாக வெளிநாடுகளுக்கு அழைப்பு எடுத்ததாக தெரிவித்து பட்டியலில் தொடர்பு கொள்ளாத இலக்கங்கள் போடப்பட்டு வருவதாகவும் இதற்கான கட்டணங்கள் ஆயிரக் கணக்கில் இருப்பது தொடர்பாக நிர்வாகத்திடம் கேட்கின்ற போது அதற்கும் தமக்கும் தொடர்பு இல்லை என்று கையை விரிப்பதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இவ்வாறு வருகின்ற பட்டியல் தொடர்பாக எழுத்து மூலம் கொடுக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கும் உரிய விளக்கத்தை நிர் வாகம் தராதது இவர்கள் மீது சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். (21)

-வட கிழக்கிலுள்ள 6 மாவட்டங்களுக்கு

# தடுப்பு மருந்து விநியோகத்திற்கு 6 வாகனங்கள், பாரஊர்தி வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

வடகிழக்கு மாகாணங்களில் உள்ள 6 மாவட்டங்களில் தடுப்பு மருந்து விநியோகத்திற்கென ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் 6 வாகனங்களும் ஒரு பாரஊர்தியும் அண்மையில் சுகாதார அமைச்சில் வைத்து அந்தந்த மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தில் தடுப்பு மருந்து விநியோகத்திற்கென பாரவூர்தியொன்றும், வாகனமொன்றும் வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனைய 5 மாவட்டங்களுக்கும் ஒவ்வொரு வாகனங்கள் வழங்கப் பெற்றுள்ளதுடன் மற்றும் மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட மாகாண சுகாதார சேவைப் பிரதிப்பணிப்பாளர் பணிமனையினர் தெரிவித்துள்ளனர். (சோ)

உலகில் மனித உரிமைகளை மீறும் அரசாங்கங்களிலே சிறிலங்கா அரசாங்கம் முன்னுரிமை வகிக்கின்றது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலக இயக்குனர் மரியாம்பிள்ளை சேவியர் கருணாரட்ணம் அவர்களைச் சந்தித்து மனித உரிமைகள் தொடர்பாகவும் மனித உரிமை மீறல்களின் தன்மைகள் தொடர்பாகவும் சிறிலங்காவில் மனித உரிமைகள் எந்தளவு பாதுகாக்கப்படுகின்றது போன்றவற்றை வெளிக்கொண்டு வரும் நோக்கிலான நேர்காணல் ஒன்றை மேற்கொண்டோம். இந்நேர்காணலின் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். அவர் தொடர்ந்து எமது கேள்விகளுக்கு பதிலளிக்கையில்,

**வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் மக்களுக்கு எவ்வாறான பணிகளை ஆற்றி வருகிறது?**

இந்த மனித உரிமைகள் செயலகமானது நீண்டகாலமாக வடக்கு கிழக்கு வாழ் மக்களுடைய அடிப்படை மனித உரிமை பிரச்சினைகளைப் பற்றி எவருமே கதைக்காத நிலையில் இந்தப் பணியை நாங்கள் இப்பகுதியில் முழுமையாகப் பொறுப்பெடுத்திருக்கின்றோம். கிளிநொச்சியில் தலைமைச் செயலகத்தை அமைத்து வடகிழக்கின் ஏனைய மாவட்டங்களிலும் எமது கிளைச் செயலகங்களை நாங்கள் திறந்து வைக்கவுள்ளோம். அதுமட்டுமல்லாமல் எமது செயலகங்களைப் பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் ஊடகங்கள் மூலமாக வடக்கு கிழக்கில் வாழும் அனைத்து மக்களுக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றோம். ஆகவே வடக்கு கிழக்கு வாழ் மக்கள் தமது மனித உரிமைகள் சம்பந்தமான பிரச்சினைகளை எமது கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். நாங்கள் அவர்களுக்கான தீர்வைக் காண இயன்றளவு முயற்சி செய்து வருகின்றோம்.

**மனித உரிமை மீறல் தொடர்பான முறைப்பாடுகளைச் செய்வதற்கு வரையறைகள் ஏதும் உள்ளதா?**


எமது செயலகத்தில் பாதிக்கப்பட்டவர் அல்லது அவரது உரித்தாளர்கள் அதாவது கணவன் அல்லது மனைவி அல்லது பெற்றோர் அல்லது சகோதரர்கள் ஆகியோர் பாதிக்கப்பட்டவரின் சார்பாக முறைப்பாடு செய்யலாம். வடக்கு கிழக்கிலே எவராக இருப்பினும் தங்களுடைய அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பதை உணர்ந்தால் அவர் முறையீடு செய்யலாம். இதற்கு நாங்கள் எந்தவிதமான வரையறைகளையும் வைக்கவில்லை. முறையீடு செய்பவரின் முறையீட்டை நாம் பதிவு செய்து அதற்குரிய படிவங்களில் அவர்களைப் பற்றிய விபரங்களையும் அந்த முறையீடு பற்றிய விபரங்களையும் பெற்றுக்கொண்டு அதனோடு தொடர்புடையவர்களுடன் தொடர்பு கொண்டு அதற்கான தீர்வினைப் பெற்றுக் கொடுக்கின்றோம். சிலவேளைகளில் மனித உரிமைகளோடு தொடர்பில்லாத பிரச்சினைகளைக் கூட மக்கள் முறையிடுவதற்காக இங்கு வருகிறார்கள். அவ்வாறானவற்றை காவல்துறையினரிடம் முறையீடு செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்து கொடுத்திருக்கின்றோம்.

**கடந்த காலங்களில் மனித உரிமை மீறல் செயற்பாடுகளுக்கான முறையீடுகளைப் பரிசீலிக்க முற்பட்டபோது இடையூறுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டா?**

எங்களுக்கு இதுவரையிலும் எந்த வகையிலும் இடையூறுகள் ஏற்படவில்லை. ஒத்துழைப்புக்களே அனேகமாக கிடைக்கின்றன. இருப்பினும் சில பிரச்சினைகளை நாங்கள் தாமதமாகவே கையாள வேண்டியுள்ளது. ஏனெனில் முறைப்பாடு செய்பவர்கள் தமக்கு நிகழ்த்தப்பட்டது மனித உரிமை மீறல் என நினைக்கிறார்கள். ஆனால் அதனோடு சம்பந்தப்பட்டவர் பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டவராக இருப்பதால் இவற்றை இனங்கண்டு தீர்ப்பதற்கு காலதாமதமாகிறது.

**சிறிலங்காவைப் பொறுத்த வரையில் மனித உரிமைகள் எந்த அளவுக்குப் பாதுகாக்கப்படுகின்றது?**

சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் உலகத்தில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாழும் உரிமையை மறுத்தே வருகிறது. வாழும் உரிமையையே வழங்க முடியாத அரசாங்கம் ஏனைய உரிமைகளை மக்களுக்கு எப்படி வழங்க முடியும். அடிப்படை உரிமையான வாழும் உரிமை இருந்தால் தான் சுயநிர்ணய உரிமையையோ கல்வி உரிமையையோ, பேச்சு உரிமையையோ ஏற்றுக்கொள்ள முடியும். வாழும் உரிமை சிறிலங்காவினுடைய அரசியல் யாப்பிலே இல்லாத ஒரு காரணத்தினாலே எந்தவொரு மனித உரிமையையும் மீறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இவ்வாறு அடிப்படை உரிமை இல்லாததனால் கூடுதலாக சிறிலங்காவில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களே. தமிழர்களைக் கொல்லை செய்யலாம், கைது செய்யலாம், கைது செய்து நீண்ட காலம் சிறைவைத்திருக்கலாம், விடுவிக்க வேண்டிய தேவை இல்லை. கொலை செய்யப்பட்டாலும் பிரேத பரிசோதனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை எனப் பல உரிமை மீறல்களோடு தம்மால் கைது செய்யப்பட்டவர்களை அரசாங்கம் கைது செய்ததாக ஒப்புக்கொள்வதும் இல்லை. உதாரணமாக யாழ்ப்பாணத்திலே இடம் பெயர்ந்து மக்கள் திரும்பிச் சென்ற போது காணாமல் போன 600 பேருக்கு என்ன நடந்தது என்று அறிய முடியாத ஒரு நிலை இருக்கிறது. அது மட்டு மல்ல பாதுகாப்புப் பிரதேசம் எனப்படும் பகுதிகளுக்குள் ஆறாயிரம் குடும்பங்கள் திரும்பிச்செல்ல முடியாத நிலையில் உள்ளன. எனவே வாழும் உரிமையை அரசாங்கம் மறுத்துள்ளதனால் சிறிலங்கா அரசாங்கமோ அரசாங்கத்தின் இயந்திரமாக இருக்கின்ற இராணுவமோ அதனோடு தொடர்புடைய அமைப்புக்களோ மீறலாம். மீறிவருகிறார்கள்.


கருணாரட்ணம் அடிகளார்

இருந்து பலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள் இங்கு சமாதான சூழல் உருவாகியுள்ளதென்று. எங்களுடைய கணிப்பின்படி இந்த மூன்று வருட காலமும் சமாதான சூழலாக அமையவில்லை.

யாழ்குடாநாட்டில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் நிலை கொண்டிருக்கிறார்கள். மக்கள் தமது இருப்பிடத்திற்கு திரும்பிச் செல்ல உரிமை இல்லை. ஆகவே எவ்வ சமாதானம் உருவானதென்பது தான் எனது கேள்வியாக அமைகிறது. ஆக தாழப் பறக்கின்ற விமானங்களின் இரைச்சலும், வெடிக்கின்ற எறிகணைகளின் சத்தங்களும் மட்டுமே ஓய்ந்து போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளதே தவிர சமாதான சூழல் இன்னும் உருவாகவில்லை. ஆகவே சமாதான சூழலை அரசாங்கம் உருவாக்காத வரை வன்முறைகளும் கெடுபிடிகளும் தொடர்ந்து கொண்டே இருக்கும். அதாவது மீளக்குடியமரும் வாய்ப்பு வடக்கு கிழக்கு மக்களுக்கு மறுக்கப்பட்ட நிலையில் வடக்கு கிழக்கு கடற்பிரதேசம் இராணுவத்தின் முற்றுகையில் இருக்கின்ற நிலையில் எவ்வாறு சமாதானம் உருவாக முடியும்?

ஏ-9 பாதை திறந்ததினாலோ புதிய பேருந்துகள் பணியில் ஈடுபடுத்தப்படுவதனாலோ சமாதானம் உருவாகப் போவதில்லை. மக்கள் சுதந்திரமாக தங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய எந்த ஒரு ஏற்பாட்டையும் சிறிலங்கா அரசாங்கம் செய்யவில்லை. வெறுமனே சமாதானம் என்று கூறிக்கொள்கின்றதே தவிர சமாதான நிலை அல்ல.

எங்களால் எதுவும் செய்யமுடியாமல் இருக்கிறது. சிறுவர்கள் போரில் இணைவது என்பது உண்மையிலேயே அவர்கள் வயது குறைந்தவர்களாக இருந்தால் நாங்கள் விடு வித்துக் கொண்டிருக்கின்றோம் அதற்கான ஒத்துழைப்பும் பூரணமாக கிடைக்கின்றது. கைதுகள் காணாமல் போனோர் சம்பந்தமாகவும் வரும்முறைப்பாடுகளில் சில வேளைகளிலே யாரால் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளார்கள் என்று கூட மக்கள் சொல்ல முடியாமல் இருக்கிறார்கள். உதாரணமாக யாழ்ப்பாணத்திலே கைதுகள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்து நாங்கள் எல்லா இடங்களுக்கும் இது தொடர்பான கடிதங்களை அனுப்பியுள்ளோம். அதற்கான பதில்களாக எவரும் கைது செய்யவில்லை என்ற பதிலையே தருகிறார்கள். ஆகவே உரியவர்களை இனங்காண சிரமமாக இருந்தாலும் உரியவர்களிடம் அதாவது எந்தெந்தப்பகுதிக்கு யார் யார் பொறுப்பாக இருக்கிறார்களோ அவர்களுக்கு நினைவூட்டல்களை கொடுத் துக்கொண்டேயிருக்கிறோம்.

சிலவற்றுக்குப் பதில்கள் கிடைத்திருக்கின்றன. சிலவற்றுக்குச் சரியான பதில் கிடைக்கவில்லை.

# அடிப்படை மனித உரிமைகள் கிடைக்குமானால் ஏனைய உரிமைப்பிரச்சினைகள் தாமாகவே தீர்ந்துவிடும்

**மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டிய அரசாங்கமே மக்களுக்கான அடிப்படை மனித உரிமை மீறல்களில் ஈடுபடுமானால் அதற்கெதிரான உங்களது செயற்பாடு எவ்வாறு அமையும்?**

## —நாளை சர்வதேச மனித உரிமைகள் தினம்—

உலகத்திலே மனித உரிமைகளை மீறுவதில் முக்கியமானவர்கள் அரசாங்கத்தினரே. இந்த மனித உரிமை அமைப்புக்களை நிறுவுவதற்குக் காரணமும் இதுவாகத்தான் அமையும்.

ஒட்டு மொத்தமான முழு மனித உரிமைகளை மீறுபவர்கள் அரசாங்கத்தினரே. இதிலே சிறிலங்கா அரசாங்கம் மனித உரிமை மீறலில் முன்னணி வகிக்கின்ற நாடாக இருக்கின்றது. இதற்கெதிரான செயற்பாடுகளில் எத்தனையோ அமைப்புக்கள் ஈடுபட்டும் முடியாமல் போய்விட்டன. இதனாலேயே தமிழர்கள் வேறு சிந்தனைப் போக்கிற்குத் தள்ளப்பட்டார்கள். இந்த அரசாங்கத்தின் கொடுமைகளில் இருந்து விடிவு பெறும் பாதையிலே தமிழ் மக்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே ஒட்டு மொத்த மக்களும் நியாயம் எனக்கருதும் அந்த வழிக்கு அமைப்பு ரீதியிலே நாங்கள் அவர்களுக்கு பலமாக இருப்பதுதான் எமது பணி என நாங்கள் நினைக்கின்றோம்.

**இலங்கையில் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள சமாதான சூழலிலும் சிறிலங்கா அரசாங்கம் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாக பல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டி வருகின்றனர். இது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**

என்னைப் பொறுத்த வரையில் சமாதானச் சூழல் இன்னும் உருவாகவில்லை. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாளில்

**வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் இதுவரை எத்தனை முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவை பொதுவாக எவ்வாறா னதாக அமைகின்றன?**

இதுவரைக்கும் குறுகிய காலத்திற்குள் 125 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே முக்கியமாக மீளக்குடியேற்றம் செய்ய முடியாத மக்களுடைய முறைப்பாடுகள் அதாவது தமது வீடுகளில் இராணுவம் குடியிருப்பதால் அங்கு மீளச்செல்ல முடியாதெனப்படுகின்ற முறைப்பாடுகள். சில காணாமல் போனவர்களுடைய முறைப்பாடு, சிறுவர்கள் போருக்கு சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற முறைப்பாடு, காணித் தகராறு, கைதுகள் சம்பந்தமான முறைபபாடு என வகைபபடுத்தியிருக்கிறோம்.

நேர் காணல் இ.சசிக்குமார் த.குகன்

**மேற்படி முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் எவ்வாறு வழங்கப்பட்டுள்ளன?**

மீளக்குடியேறுவது தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத நிலையிலேயே இருக்கின்றோம். ஏனெனில் ஒட்டுமொத்தமாக சிறிலங்கா அரசாங்கத்தினுடைய மறுப்பு, இராணுவத்தினரின் ஒத்துழைப்பு இல்லாமை சிறிலங்காவினுடைய அரசியல் அமைப்பே அதற்கு பாதுகாப்பு கொடுக்காத நிலையில்

**சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மக்களுக்கும் ஏனைய தரப்பினருக்கும் நீங்கள் கூற விரும்புவதென்ன?**

மனித உரிமைகள் தினம் கொண்டாடப்பட வேண்டியதன் அவசியத்தை வடக்கு கிழக்கில் உள்ள அனைவரும் வலியுறுத்தியுள்ளார்கள். அரசாங்கம் சர்வதேச சமூகம் ஏனைய தரப்பினர்கள் எனப் பலரும் வரவேற்றிருக்கிறார்கள். ஐம்பது ஆண்டுகாலமாக அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கு ஒரு பெரும் விழிப்புணர்வையும் தங்களைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டிய வாய்ப்பையும் கொடுக்க வேண்டியதன் அவசியம் உண்டு. இதை மாவட்ட ரீதியாக செய்யமுடியாது போனாலும் வன்னியிலே கிளிநொச்சி தலைமை செயலகத்தினூடாக பெரிய அளவிலான விழாவை செய்ய நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். தமிழ் மக்கள் நீண்டகாலமாக தமது அடிப்படை உரிமையின்றி வாழ்கிறார்கள்.இவர்களின் நீண்டகால அபிலாசைகளை கண்ணோக்கிப் பார்பதற்கோ, அவர்கள் வாழுகின்ற உரிமை தங்கள் தாயக உரிமை தமது தேசிய இன அடையாளத்தை சுயநிர்ணய உரிமைகளை வழங்கவோ இந்நாட்டில் யாரும் தயாராக இல்லை. இதனை மக்கள் பெறக்கூடியதாக இருந்தால் அடுத்து வரும் சிறிய அளவிலான உரிமை மீறல்கள் தானாகவே இல்லாது போகும். உதாரணமாக சிறுவர்களுக்கு ஆரம்பக்கல்வியை கற்பிக்க தமிழ்மொழி பாடசாலைகளுக்கு ஏற்ற வசதியை சிறிலங்கா அரசாங்கம் வழங்கவில்லை. ஆரம்பக்கல்வி கற்பதற்குரிய போதுமான அளவு ஆசிரியர் இல்லை என்றால் சிறுவர்கள் கல்வி உரிமை மறுக்கப்பட்டவர்கள் சுய நிர்ணய உரிமை தமிழர்களுக்கு கிடைத்தால் அவர்கள் தாங்களாகவே தமது கல்வித் திட்டத்தை வகுத்து கல்வி வசதியைப் பூரணப்படுத்த முடியும். சிறிலங்கா அரசு தமிழர்களின் கல்வியிலே மிக அப்பட்டமான மோசமான பாரபட்சம் காட்டுகிறதென்பது எல்லோருக்கும் தெரியும். இந்த அடிப்படை உரிமைகள் கிடைக்குமானால் தாங்களாகவே கல்வித் திட்டத்தை வகுத்து கொள்ள முடியும். எனவே ஒட்டு மொத்தமான அடிப்படை மனித உரிமைகள் தீர்க்கப்படுமானால் ஏனைய உரிமைப் பிரச்சினைகள் தானாகவே தீரும்.

●●●

# நாட்டின் இறைமைக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தலை எதிர்கொள்ளத்தயார்

ரட்ணசிறி விக்கிரமநாயக்க

நாட்டின் இறைமைக்கு ஏற்படக்கூடிய எந்த அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள எமது படையினர் தயாராக உள்ளனர் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கடந்த செவ்வாய்க் கிழமை பாராளுமன்றில் சூளுரைத்துள்ளார்.

பாதுகாப்புச் செலவீனத்துக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்- "எமது படைகளை நாம் ஆளணியாலும், ஆயுத வளத்தாலும், உளரீதியாகவும் உயர்ரக ஆயுதங் களாலும்,உபாயங்களாலும் வலுப்படுத்திக்கொண்டுதான் இருக்கின்றோம். வலுப்படுத்தத்தான் போகிறோம். இலங்கை இறைமையுள்ள நாடு என்ற வகையில் அதைப் பாதுகாக்க இத்தகைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது எமது பொறுப்பு. யுத்தம் புரிவது எமது விருப்பமல்ல. ஆனால் மக்களைத் தூண்டிவிட்டு வன்முறைகளின் ஊடாக புலிகள் யுத்தத்தைத் திணிக்க முற்படும்போது அதிலிருந்து மக்களைக் காப்பாற்ற எமது படைகளை உஷார் நிலையில் வைத்திருக்க வேண்டியது பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் எனது பொறுப்பாகும்." - என்றார். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைவு பற்றி அவர் கூறுகையில்-" புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைவை மட்டும் பேச்சு மேசையில் பரிசீலனைக்கு எடுக்க அரசு தயாரில்லை. இறுதித் தீர்வு பற்றியும் பேசப்படவேண்டும் இந்த நிலைப்பாட்டில் அரசு மிகத் தெளிவாக உள்ளது."- என்றார்.

# கொழும்பில் தமிழ்க் குடும்பங்களை பதிவுசெய்யப் பொலிசார் வற்புறுத்து

கொழும்பின் சில பகுதிகளில் தமிழ்க் குடும்பங்களின் விபரங்களைப் பதிவுசெய்யுமாறு பொலிசார் வற்புறுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாரஹென்பிட்டியப் பகுதியிலுள்ள தமிழர்களின் வீடுகளுக்குச் சென்ற பொலிசார் குடும்ப அங்கத்தவர்களின் விபரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கோரியுள்ளனர். மீண்டும் பொலிஸ் பதிவு நடைமுறை வந்துள்ளதால் தமிழ்மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கு வதாகவும், மீண்டும் அச்சத்துடன் தென்னிலங்கையில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். நாரஹென்பிட்டிய தொடர்மாடி யில் உள்ள வீடுகளுக்குச் சென்ற பொலிசார் குடும்பத்தில் உள்ளவர் களது பெயர் விபரங்களை எழுதிப் பெற்றுச் சென்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

பொலிசார் மீண்டும் பொலிஸ் பதிவு என்று கூறிக்கொண்டு பொது மக்களிடம் பணத்தை இலஞ்சமாகப் பெற முற்படுவதாகவும் பல பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறி திருமலையில் புதிய படை முகாம்கள்

## தடுத்து நிறுத்த மக்கள் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் வகையில் சிறிலங்காப் படையினரால் திருகோணமலையில் புதிய இராணுவ முகாம்கள் மற்றும் காவலரண்கள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த இரண்டாம் திகதியின் பின்னர் திருகோணமலை சிறிமாபுர சந்திக்கு அருகில் ஒரு புதிய இராணுவ முகாம், அபயபுரம் புத்த கோயிலுக்கு அருகிலும், செல்வநாயகபுரம் பாம்குளத்தின் மேற் பகுதியிலும், மகிந்தபுர அருகிலும் அபயபுரத்திலும் காவல் நிலையங் களை அமைத்து வருகின்றனர். இவ்வாறு இராணுவத்தினரால் அமைக் கப்பட்டு வரும் காப்பரண்கள் தமிழ் மக்கள் வாழ்ந்து வரும் பகுதிகளைச் சுற்றி அமைக்கப்படுகிறது.

இராணுவத்தின் இச்செயற்பாட்டால் அப்பகுதி மக்கள் பெரும் குழப்பமடைந்துள்ளதுடன் பாதுகாப்புத் தேடி இடம்பெயர வேண்டிய ஒருவித அச்ச உணர்வுடன் காணப்படுகின்றனர். இது யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு முற்றிலும் மாறான செயற்பாடாகும். எனவே, யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு அமைவாக படையினரின் இத்தகைய நடவ டிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ([illegible])

# உலுக்குளம் பிரதேச வைத்தியசாலையில் மகப்பேற்று, மருத்துவமாது விடுதிகள் திறப்பு

(வவுனியா செய்தியாளர்)

உலுக்குளம் பிரதேச வைத்திய சாலை வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்ட நிதியில் புதிதாக நிர்மாணிக் கப்பட்ட மகப்பேற்று விடுதி, மருத்து வமாது விடுதி என்பன கடந்த ஞாயிறு நண்பகல் 12.00 மணியள வில் திறந்து வைக்கப்பட்டன.

வவுனியா மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப் பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் 4.2 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மகப் பேற்று விடுதியினையும், 1.5 மில் லியன் ரூபா செலவில் நிர்மாணிக் கப்பட்ட மருத்துவமாது விடுதியி னையும் வன்னிமாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத் தியர் குமாரவேற்பிள்ளை சுகாதார அதிகாரிகள், வைத்தியசாலை ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (10)


வடக்கு-கிழக்கு மாகாண சபை

# போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)

நிதி-ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆஅவ கடன் இல:- 2043 சிறீ (எஸ்எவ்)

## திருகோணமலை மாவட்ட நிர்மாண வேலைக்கான

# கேள்வி அறிவித்தல் - இல.36

01) போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02) இதன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும், NECORD திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் சார்பாகத் திருகோணமலை மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

அட்டவணை

| தொ. இல | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MN/CAARP/HS/04 | மன்னார்,மாகாண மாவட்டசுகாதார சேவைகள் திணைக் களப் பணிப்பாளர் பணிமனை திருத்த வேலை. | M5 (கட்டடங்கள்) | 129,000/= |
| 02 | KN/CAARP/RD/01 | உருத்திரபுரம் 0-2 கிலோ மீற்றர் இணைந்த வீதிக்கான திருத்த வேலை. | M7 (நெடுஞ்சாலை) | 40,000/= |
| 03 | KN/CAARP/RD/01 | உருத்திரபுரம் 2-3.5 கிலோ மீற்றர் இணைந்த வீதிக்கான திருத்த வேலை. | M7 (நெடுஞ்சாலை) | 40,000/= |

03) பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I) நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II) இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTAD மேற்படி M7க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III) கடந்த ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்தி கரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் 2003-07-01ஆம் திகதிக்கு பின்பு தங்களை ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்து ஒத்ததன்மையான வேலை களை ஒப்பந்தக்காரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவோ இத்தகைய வேலைகளை நல்லமுறையில் செய்து முடித்தவர்களாக இருக்க வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத் தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படல் வேண்டும்.

IV) "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V) மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04) ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் CAARP வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05) தகுதி வாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, 55, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 026-2227434, தொலைநகரி 026-2227401, மின்னஞ்சல் necord@sltnet.lk)

06) கேள்வி ஆவணங்களை 2004-12-10 இலிருந்து 2004-12-24 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 1000/- ஐ செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07) கேள்வி கோருபவர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணமும் விலையிடப்பட்ட கேள்விகளின் இரண்டு பிரதிகளும் பொறிவைக்கப்பட்ட தனித்தனி உறைகளில் 8ஆவது பந்தியில் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட திகதி, நேரத்தில் கையளிக்கப்பட வேண்டும்.

08) அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணை முறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், கேள்விச் சபை, NECORD, 55, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 2004 மார்கழி 31 முற்பகல் 11.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்க அனுப்பப்படல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

09) முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று 2004 மார்கழி 24 முற்பகல் 11.30க்கு NECORD, 55, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற முகவரியிலுள்ள எமது காரியாலயத்தில் நடைபெறும்.

10) கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாகமாட்டார்.

**த. லங்காநேசன்,**
கேள்விச்சபைத் தலைவர்,
வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்,
55, கந்தசாமி கோவில் வீதி,
திருகோணமலை.

(சி-11010)

# மத்திய -மாநில அரசுகளின் உறவை ஆராய விரைவில் புதிய ஆணைக்குழு


## -சோனியா காந்தி அறிவிப்பு

"மத்திய மாநில அரசுகளின் உறவு பற்றி ஆராய்வதற்காக விரைவில் புதிய ஆணைக்குழு அமைக்கப்படும்." என்று காங்கிரஸ் தலைவர் சோனியா அறிவித்தார். காங்கிரஸ் கட்சி எம்.பிக்கள் கூட்டம் நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்றது. காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி இக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியதாவது: மத்திய மாநில உறவு "மதக் கலவரங்களைத் தடுப்பதற்காக முன் மாதிரியான ஒருங்கிணைந்த சட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் இதன்படி மதக் கலவரங்களில் பாதிக்கப்படுபவர்களுக்கு ஒரே சீரான நஷ்டஈடு வழங்கவும் விரைவானவிசாரணை நடத்தவும் விதி முறைகள் வகுக்கப்படும்

மத்திய மாநில அரசுகளுக்கு இடையேயுள்ள உறவு பற்றி விரிவாக ஆராய்வதற்காக புதிய ஆணைக்குழு அமைக்கப்படும் நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழு ஒன்றும் விரைவில் அமைக்கப்படும்.

பெண்களுக்குச் சமவுரிமை வழங்குவதற்காக முக்கிய சட்டங்களில் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன. கிராமப் புறவேலை உத்தரவாத சட்டப் பிரேரணையும் சிறுபான்மையோர் கல்வி நிறுவனங்களை மத்திய பல்கலைக் கழகங்களுடன் நேரடியாக இணைப்பதற்கான தேசிய ஆணைக்குழு அமைக்கும் சட்டப் பிரேரணையும் விரைவில் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் என்று சோனியா கூறினார்.

நடந்து முடிந்த மராட்டியம் அருணாச்சலப் பிரதேச மாநில தேர்தல் பணி குறித்து திருப்தி தெரிவித்தசோனியா, வரவிருக்கும் பீகார், அரியானா மற்றும் ஜார்கண்ட் மாநில தேர்தல்களிலும் மெத்தனமாக இருந்து விடாமல் ஒருங்கிணைந்து பணி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பெற்றோலியப் பொருட்கள் விலையுயர்வு பற்றி விமர்சிக்கும் பா.ஜனதாக் கட்சியை "கபட வேடதாரி" என்று வர்ணித்த சோனியா பெற்றோலியப் பொருட்களின் உள்நாட்டு விலையை சர்வதேச விலையுடன் இணைத்ததே பா.ஜனதாக் கூட்டணி ஆட்சிக் காலத்தில் தான் என்றும் குற்றம் சாட்டினார். மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என்று அவர் உறுதியளித்தார்.




வேலை நிறுத்த உரிமையை சட்டமாக்கக் கோரிபுதுடில்லியில் அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாராளுமன்றம் நோக்கி மாபெரும் பேரணி நடத்தினர். சுமார் 1இலட்சம் பேர் கலந்துகொண்ட இந்தப் பேரணியில் தமிழ் நாட்டில் இருந்து சுமார் 2000 ஆயிரம் பேர் பங்கேற்றனர். பேரணியில் தமிழ் நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பினர் கோஷங்களை எழுப்பியவாறு சென்றபோது எடுத்த படம்.

# காஞ்சி சங்கரமடம், ஜெயேந்திரர் நிலைமைகள் குறித்து ஆராய ஏற்பாடு

(புதுடில்லி)

காஞ்சி சங்கரமடத்தில் பொலிஸ் தரப்பில் மனித உரிமை மீறல் நடைபெறுவதாக கூறப்படும் புகார் குறித்து விசாரிக்கவும் சங்கராச்சாரியார் நடத்தப்படும் விதம் குறித்து ஆய்வு செய்யவும் தேசிய சனநாயகக் கூட்டணி எம்.பிக்கள் குழு காஞ்சிபுரம் மற்றும் வேலூர் செல்கின்றது.

மக்களவை பா.ஜ.க துணைத் தலைவர் வி.கே மல்கோத்ராசெய்தியாளர்களிடம் இத் தகவலைத் தெரிவித்தார். சங்கர மடத்தில் பணியாற்றுவோர் பொலிஸ் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு துன்புறுத்தப்படுவதாக புகார்கள் வந்துள்ளன. 20 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவங்கள் தோண்டி எடுக்கப்பட்டு விசாரணை என்ற பெயரில் பல விதி மீறல்கள் நடைபெறுகின்றன. பல்வேறு வகைகளில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. இது குறித்து நேரில் விசாரிக்க தேசிய சனநாயக கூட்டணி எம்.பிக்கள் குழுவை காஞ்சிபுரத்திற்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. அதே போல் சங்கராச்சாரியார் நடத்தப்படும் விதம் குறித்தும் பல்வேறு தகவல்கள் வந்துள்ளன. அவருக்கு எதிராக அரச இயந்திரம் முறைகேடாக பயன்படுத்தப்படுகின்றது. இது குறித்தும் வேலூர் சென்று எம்.பிக்கள் குழு நேரில் ஆய்வு செய்யும். இக் குழுவில் இடம்பெறும் பிரதிநிதிகளின் பெயர்கள் விரைவில் முடிவு செய்யப்படும் என்றார் மல்கோத்ரா. இந்த வார இறுதியில் அக்குழு நேரடி ஆய்வு நடத்தும் என்று தெரிகின்றது.

# இந்திய மத்திய அரசு பணிகளில் 93 ஆயிரம் பதவிகள் ஒழிப்பு

## நிதியமைச்சர் ப. சிதம்பரம் தகவல்

(புதுடில்லி)

இந்திய மத்தியரசு பணியில் 93 ஆயிரம் பதவிகளை ஒழிக்க முடிவு செய்திருப்பதாக மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்தார். மாநிலங்களவையில் நேற்று முன்தினம் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் கூறியதாவது;

மத்திய அரசின் பணியாளர் பயிற்சித் துறை அனைத்துத் துறைகளும் 2001 மே மாதம் ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. அதன் படி நேரடி நியமனத்தில் காலியாகும் பதவிகளில் மூன்றில் ஒரு பங்கைத்தான் நேரடி நியமனம் மூலம் நிரப்ப வேண்டும். அதுவும் அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் மொத்த எண்ணிக்கையில் ஒரு சதவீதத்தைத் தாண்டக் கூடாது.

இந்த உத்தரவின் படி 93 ஆயிரம் பதவிகள் ஒழிக்கப்படல் வேண்டும் என்றும் 39 ஆயிரம் பதவிகள் நிரப்பப்பட வேண்டும் என்றும் கண்டறியப்பட்டது. இது பற்றி ஆராய அமைச்சரவைச் செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. எந்தத் துறையாவது சில பதவிகளைத் தக்க வைத்துக் கொள்ள விரும்பினால் இந்தக் குழுவிடம் முறையிடலாம். திட்டம் சாராத வளர்ச்சி அல்லாத செலவுகளைக் குறைக்க அரசு பெரும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றது. அதற்காக புதிய பதவிகள் உருவாக்கப்படுவதைத் தடுக்கவும் காலி இடங்களை நிரப்புவதைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. செலவு சீர்திருத்த ஆணையகம் 42 ஆயிரம் அரச பதவிகள் ஒழிக்கப்பட்ட வேண்டும் என்று கண்டறிந்தது. ஆனால் சம்பந்தப்பட்ட துறைகள் 24 ஆயிரம் பதவிகளை ஒழித்தால் போதும் என்று கூறின. அதில் 18ஆயிரத்து 682 பதவிகள் தற்போது ஒழிக்கப்பட்டு விட்டன. இவ்வாறு கூறினார்.

வெள்ளைப் பட்டி தினம்

நவம்பர் 25ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 10ஆம் திகதி வரையும்

ஆண்களுக்கும் பெண்களுக்குமான ஓர் சுதந்திரமான சமூகமே எமக்குத் தேவை.

பெ.அ.பு.நிறுவனம், ஒக்ஸ்பாம்

(சி-11007)

# நாகா தலைவர்களுடன் மன்மோகன்சிங் பேச்சு

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நாகா தலைவர்கள் சந்தித்துப் பேசினார்கள் நாகர்லாந்தில் அமைதி ஏற்பாடுகளை முன்னேற்றம் அடையச் செய்திடும் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்தச் சந்திப்பு நடந்தது. நாகா தீவிரவாத அமைப்பின் தலைவர்கள் ஐசக்சுவு மற்றும் டி.முய்வா ஆகியோர் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்து 30 நிமிடம் பேச்சு நடத்தினர். நாகலாந்து அமைதி ஏற்பாடுகள் குறித்த பல்வேறு பிரச்சினைகளை அவர்கள் பேசியதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. நாகா தலைவர்கள் தற்போது நெதர்லாந்தில் வசித்து வருகிறார்கள் இரு தினங்களுக்கு முன்பு அவர்கள் நெதர்லாந்திலிருந்து டில்லி வந்தனர்.

# அரசாங்க அறிவித்தல்

## கூறுவிலை கோருதல்

யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கு விநியோகிப்பதற்கு கீழ்குறிப்பிடப்படும் பொருட்களை வழங்குவதற்கு ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| No | Item | No | Item |
|---|---|---|---|
| 01 | Flat Walker | 26 | Stop Watch |
| 02 | Rowing Machine | 27 | Volley Ball Post |
| 03 | Wall bar set (with bench) | | Model A (With a Rachet) |
| 04 | Stationary cycle | 28 | Net Ball Post |
| 05 | Hip Rotator (Twiser) | | Model A (Light Base) |
| 06 | Mirror 4'x4' | | Model B (Heavy Base) |
| | 6'x4' | 29 | Volley Ball Net 60 Ply |
| 07 | Pole Vault Mattress | 30 | Spring Board |
| | (Standard) | 31 | Shot Puttring & Stop bcard |
| 08 | Pole Vault Uprights | 32 | Vaulting Box |
| 09 | Pole Vault Crossvar (Alum.) | 33 | Time Keepers Stand |
| 10 | Pole Vault Pole | | 01. 08 Persons |
| 11 | High Jump Mattress | | 02. 12 Persons |
| | (Standard) | | 03.16 Persons |
| 12 | High Jump Upright | | 08 Persons |
| | Model A (L/B) | 34 | Judges Stand |
| | Model B (L/B) | | 08 Persons |
| | Model C (H/B) | | 12 Persons |
| 13 | High Jump Crossbar (Alum) | | 16 Persons |
| 14 | Discus 01 k/g | | 08 Persons |
| 15 | Discus 02 k/g | 35 | Medicine Ball 5 k/G |
| | Discus 01 k/g | | Medicine Ball 4 k/G |
| | Discus 02 k/g | | Medicine Ball 3 k/G |
| 16 | Shot- Put 04 k/g | | Medicine Ball 2 k/G |
| 17 | Shot- Put 7.26 k/g | | Medicine Ball 1 k/G |
| 18 | Javelin 600 k/g (Hylite) | 36 | Weight Disc 10 k/g |
| | Javelin 600 k/g (Appolo) | | 7.5 k/g |
| 19 | Javelin 800 k/g (Hylite) | | 0 5 k/g |
| | Javelin 800 k/g (Appolo) | | 2.5 k/g |
| 20 | Starting Block | | 01 k/g |
| 21 | Hurdle Mod.A (L/B) | 37 | Weight Bar 04 Feet |
| | Hurdle Mod.B (L/B) | | 05 Feet |
| | Hurdle Mod.C (L/B) | | 06 Feet |
| 22 | Foot Ball | 38 | Dumbel 10 k/g |
| 23 | Volley Ball | | Dumbel 25 k/g |
| 24 | Net Ball | 39 | Grass Cutter |
| 25 | Tennis Ball | | |

2) மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகக் கணக்காளரிடம் செலுத்தி கூறுவிலைப் படிவங்களை 2004-12-07ஆம் திகதி தொடக்கம் 2004-12-20ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

3) கூறுவிலைகளை சமர்ப்பிக்க விரும்பும் வியாபார நிறுவனங்கள் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பாக ரூபா 40,000.00 ரூபாவை யாழ். மாவட்ட செயலக இலங்கை வங்கியில் செலுத்தி பற்றுச்சீட்டின் பிரதியை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய விலைகேள்முறி ஒன்றினை கூறுவிலை கோருதல் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

4) பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப்பட்டியலை இரு பிரதிகளில் தலைவர், மாவட்ட கேள்விச் சபை மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத்தபால் உறையில் நேரடியாகவோ தபால் மூலமாகவோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலக (திட்டப் பணிப்பாளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004-12-20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்படும். அப்பொழுது கூறுவிலை கோரியவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

5) கூறுவிலைகள் உள்ளடக்கிய தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு எனக் குறிப்பிடல் வேண்டும்.

**செ. பத்மநாதன்,**
தலைவர் / அரசாங்க அதிபர்,
மாவட்டக் கேள்விச் சபை,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(5360)

# பரபரப்பான இரண்டாவது ஒரு நாள் போட்டியில்
# அவுஸ்திரேலிய அணி 17 ஓட்டங்களால் வெற்றி



அவுஸ்திரேலியா- நியூசிலாந்து அணிகளுக்கிடையே மெல்பேர்னில் நடைபெற்ற பரபரப்பான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங் முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார்.

இதன் படி நிர்ணயிக் கப்பட்ட ஓவரில் அவுஸ்திரேலியா 7 விக்கெட்டுக்களை இழந்து 261 ஓட்டங்களைப் பெற்றது.



துடுப்பாட்டத்தில் அடம் கில்கிறிஸ்ட் அதிரடியாக ஆடி 48 பந்துகளை எதிர் கொண்டு 60 ஓட்டங்களைப் பெற்றார். இவரை விட லீமன் 52,ஹெய்டன் 43, பொண்டிங் 32 ஓட்டங்களையும் ஹொக் ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மில்ஸ் இரண்டு விக்கெட்டுக்களையும், கெயான்ஸ்,ஸ்ரைறிஸ்,விக்டோரி தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இரண்டு வீரர்கள் ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்தனர்.

பதிலுக்கு ஏற்கனவே முதலாவது ஒரு நாள் போட்டியில் பெற்ற வெற்றியின் உற்சாகத்துடன் 262 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து தனது முதல் விக்கெட்டை மொத்த ஓட்டம் 27 ஆக இருக்கும் போது இழந்ததுடன் மொத்த ஓட்டம் 86 ஆக இருக்கும் போது முக்கிய ஆறு விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டதுடன் படுதோல்வி ஒன்றைச் சந்திக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அனைவரது எதிர்பார்ப்புக்களையும் பொய்யாக்கிய நியூசிலாந்தின் பின்வரிசை ஆட்டக் காரர்கள் அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்களின் பந்துகளைத் துவம்சம் செய்து அவுஸ்திரேலிய அணிக்கு நெருக்கடியைக் கொடுத்ததுடன் கௌரவமான தோல்விக்கு வழிசமைத் தனர்.






துடுப்பாட்டத்தில் கிறிஸ்கெயான்ஸ் 50 ஓட்டங்களையும், விக்டோடு 33 ஓட்டங்களையும், பிளெமிங் 34 ஓட்டங்களை யும்,மக்கலம் 21 ஓட்டங்களையும், மில்ஸ் ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர்.

மில்ஸ் நான்கு ஆறு ஓட்டம் ஒரு நான்கு ஓட்டம் அடங்கலாக 26 பந்துகளில் 44 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் பிரெட்லீ,கிளெஸ்பி தலா இரண்டு விக்கெட்டுக்களையும், ஹொக் 3 விக்கெட்டுக்களையும், மெக்ராத், சைமன்ஸ் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.



போட்டியின் சிறப்பாட்டக் காரராக அவுஸ்திரேலியாவின் ஹொக் தெரிவானார்.

மூன்று போட்டிகள் கொண்ட மேற்படி தொடரில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியைப் பெற்று சமநிலையில் உள்ளன. மூன்றாவதும் இறுதியுமான போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிறிஸ்பேனில் நடைபெற வுள்ளது.

## தென்னாபிரிக்க அணியில் மீண்டும் போயே
## முதலாவது டெஸ்ட் போட்டி வரும் 17 ஆம் திகதி



தென்னாபிரிக்க அணியில் போயே மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

மைக்கேல்வோகன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் செய்துள்ளது. இரு அணிகளும் மோதும் முதல் டெஸ்ட் போட்டி வருகிற 17 ஆம் திகதி ஜோகனஸ் பேர்க்கில் நடக்க உள்ளது. டெஸ்ட்போட்டிக்கான தென் ஆபிரிக்கா அணி அறிவிக்கப்பட்டது. இதில் சுழல் பந்து வீச்சாளர் நிக்கிபோயே மீண்டும் அணிக்கு திரும்பி இருக்கிறார். சூதாட்ட விசாரணைக்கு பயந்து இந்திய சுற்றுப்பயணத்துக்கான அணியில் இருந்து போயே விலகினார்.

இந்திய பயணத்தை புறக்கணித்த முன்னணி ஆட்டக் காரர் கிப்ஸ் மீண்டும் அணியில் சேர்க்கப்பட வில்லை கைவிரலில் காயம் காரணமாக அவதிப்பட்டு வரும் கிப்ஸ் இன்னும் முழுகுணம் அடையவில்லை என்று தென் ஆபிரிக்கா கிரிக்கெட் சபை கூறியுள்ளது. இது தவிர டேல்ஸ்டென், டிவில்லியர்ஸ் ஆகியோர் முதன்முறையாக அணியில் வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். சிம்பாப்வே அணிக்கு எதிரான 4 ஒருநாள் போட்டியிலும் எளிதாக வெற்றிபெற்ற இங்கிலாந்து அணிக்கு தென்ஆபிரிக்காவில் நிறைய சோதனைகள் காத்திருப்பது குறிப்பிடத்தக்கது. அணிவீரர்கள் விபரம் வருமாறு. கிராம்ஸ்மித் தலைவர் நிக்கிபோயே, ஹசீம்அம்லா, ஜான்டர்டி பிரைன், டிவில்லியர்ஸ், டிப்பனர், ஆன்டுருஹோல், ஜாக்குவிஸ் காலிஸ், மக்காய நிட்னி, ஷோன் போலக், ருடால்ப், டேல்ஸ்டென், சோல்கில்.

## ஜோன் ரைட் நீடிப்பார்

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக ஜோன் ரைட் நீடிப்பார் என்று கிரிக்கெட் சபை செயலாளர் எஸ்.கே. நாயர் கூறினார். சமீபத்தில் நடந்த ஆசிய கோப்பை, நெதர்லாந்தில் நடந்த 3 நாடுகள் போட்டி, நாட்வெஸ்ட் போட்டி, மினி உலக கோப்பை போட்டி, அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் ஆகியவற்றில் இந்திய அணி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகப்போவதாக ஜோன்ரைட் கூறிவந்தார்.

இதற்கிடையில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா கைப்பற்றியத்தைத் தொடர்ந்து பயிற்சியாளரை மாற்றும் முடிவு கைவிடப்பட்டுள்ளது

## றோசன்பர்க் அணிக்கு எதிரான போட்டியில்
## ஆர்சனல் கால்பந்து அணிக்கு அபார வெற்றி



ஆர்சனல், றோசன்பர்க் அணிகளுக்கிடையில் நடைபெற்ற உதை பந்தாட்ட நொக்கவுட் லீக் போட்டியில் ஆர்சனல் 5-1 என்ற கணக்கில் எளிதான வெற்றியைப் பெற்றது. அவ்வணியின் அன்டோனியோ ரேயிஸ் ஆட்டம் தொடங்கிய 3ஆவது நிமிடத்தில் ஒருகோலையும், தியாரி கென்றி 24ஆவது நிமிடத்தில் ஒரு கோலையும், செஸ்பெப்ரிகஸ் ஒரு கோலையும் அடித்தனர். இது அவ்வணிக்கே அதிர்ச்சியளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனை அடுத்து றோஸன்பர்க் அணிவீரர் எரிக் கோட்டன் ஒரு கோலையடித்தார். அதன்பிறகு ஆர்சனல் வீரர் றொபர்ட் பயர்ஸ் தண்ட உதை (panalty) மூலம் ஒரு கோலையடித்ததும் 41ஆவது நிமிடத்தில் 4-1 என்ற கணக்கில் இரு அணிகளும் ஆடின. கடைசியாக டச்மன் ஒருகோலை அடித்து வெற்றிக்கு உறுதியளித்தார்.

உலகில் முன்னணி வாய்ந்த கழகங்களில் ஆர்சனலும் ஒன்று.




## 2004 ஆம் ஆண்டுக்கான சிறந்த
## டென்னிஸ் வீரராக கென்மன் தெரிவு

லவ்ன் ரெனிஸ் கழகம் விம்பிள்டனில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் 2004இற்கான சிறந்த டெனிஸ் வீரருக்கான விருதை கென்மனுக்கு வழங்கியுள்ளது.பிரிட்டனைச் சேர்ந்த கென்மன் கடந்த ஆண்டு பிரான்ஸ்,மற்றும் அமெரிக்க ஓபன் போட்டிகளில் அரையிறுதி வரை முன்னேறினார்.

அடுத்ததாக ஸ்கொட்லாந்தின் அன்ருமுரேயும் 2004ஆம் ஆண்டுககான சிறந்த இளம் வீரர் என்ற விருதைப்பெற்றுள்ளார். இவருக்கு ஓபன் ஜுனியர்விருதும் இத்தாலியில் நடைபெறும் போட்டிகளுக்காகவும் விருது வழங்கப்பட்டுள்ளது.

ஊனமுற்றோருக்கான போட்டியில் வெற்றி பெற்ற சிறந்த வீரருக்கான விருதை பீற்றர் நோபோல்க் பெற்றுள்ளார். அவருக்கு இது மூன்றாவது அமெரிக்க ஓபன் போட்டி விருதாகும். கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற ஜுனியர் டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்ற பிரிட்டனின் 14 வயதுப் பிரிவு ஆண் சிறந்த அணியாக விருதுபெற்றது.கென்மன் 2005ஆம் ஆண்டு குயங் போட்டியில் றோஜர் பெடரர் அன்டி ரொடிக் அன்ரு, அகாசி ஆகியோருடன் போட்டியிடுவார்.

## சம்பியன் கோப்பை ஹொக்கி தொடர்
## ஸ்பெயின்,நெதர்லாந்து அணிகள் முன்னிலையில்

சம்பியன்ஸ் கோப்பை ஹொக்கிப் போட்டியில் ஸ்பெயினின் வெற்றிப் பயணம் தொடர்கிறது.

லாகூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற லீக் ஆட்டத்தில் நியூசிலாந்தை 3-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து, 3-ஆவது வெற்றியைப் பதிவு செய்தது ஸ்பெயின்.



இவ்வெற்றியால் கிடைத்த புள்ளியையும் சேர்த்து மொத்தம் 9 புள்ளிகளுடன் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இறுதிச் சுற்று வாய்ப்பைப் பிரகாசப்படுத்திக்கொண்டுள்ளது.

முதல் பாதியில் ஸ்பெயினுக்கு சவால் கொடுத்த நியூசிலாந்து, பிற்பாதியில் தாக்குப் பிடிக்க முடியாமல் தோல்வியைத் தழுவியது.

ஸ்பெயின்'ஸ்டிரைக்கர்' எடுவார்டு அப்ரோஸ், தோள்பட்டை இறங்கியதால் அடுத்தடுத்த ஆட்டங்களில் விளையாடமுடியாத சூழலைப் பெற்றுள்ளார். இவரது இழப்பு, ஸ்பெயினுக்குக் கடும் பின்னடைவாக அமைந்துள்ளது.

நியூசிலாந்து தான் விளையாடிய 3 ஆட்டங்களிலும் தோல்வியுற்று இப்போட்டியில் மிகவும் பின்னடைவு கண்டுள்ளது.மற்றொரு ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் நெதர்லாந்து 4-1 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானைத் தோற் கடித்தது.

பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில், கடைசி 5 நிமிடங்களில் நெதர்லாந்து 2 கோல் களை அடித்தது திருப்பமாக அமைந்தது. ஆட்டநேரத்தில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்து சமநிலை பெற்றிருந்தன.

லீக் முறையில் நடைபெற்றுவரும் இப் போட்டியில், இதுவரையிலான 3 ஆட்டங்களிலும் வெற்றி பெற்ற மொத்தம் 9 புள்ளிகளைச் சேர்த்துள்ளது நெதர்லாந்து. அதேசமயம் பாகிஸ்தான் 6 புள்ளிகளைச் சேர்த்துள்ளது. இதேவேளை நேற்று முன்தினம் ஜேர்மனியைத் தோற்கடித்த இந்தியா முதலாவது வெற்றியைப் பெற்றது.

## மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான
## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

இடைநிறுத்தி வைக்கப்பட்ட மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை 11-12.2004 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாக இருப்பதால் இச்சுற்றுப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட அணிகள் அன்று காலை 8.00 மணிக்கு உதயதாரகை மைதானத்திற்கு வருகை தருமாறு கிளி.மாவட்ட விளையாட்டுதுறைப் பொறுப்பாளர் ராஜா கேட்டுக்கொண்டுள்ளார்.

லீக் ஆட்டமாக நடைபெறவுள்ள மேற்படி போட்டியில் கரைச்சிப்பிரதேசத்தில் இருந்து லக்கிஸ்ரார், சந்திரோதயா அணிகளும், பூநகரி பிரதேசத்தில் இருந்து சென்மேரிஸ்,விநாயகர் அணிகளும்,கண்டாவளையில் இருந்து பரந்தன் இளைஞர் வட்டம் , முரசுமோட்டை அணிகளும், பளைப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து சோலை அணிகளும் மோதவுள்ளன.

## ஊக்கமருந்து உட்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் கிறிஸின் குறுந்தூர ஓட்ட இணை பரிசோதனையில்






கிறிஸ் நாட்டைச் சேர்ந்த குறுந்தூர ஓட்ட வீரர் இணை கொஸ்டாஸ் கென்ரரிஸ், கத்திரினா தனு ஆகியோர் மீது ஊக்க மருந்துப் பாவனை தொடர்பாக உடன் பரிசோதனை ஒன்றிற்குட்பட்டுள்ளதாக அறியவருகிறது.

இவர்களிருவர் மீது கடந்த எதென்ஸ் போட்டிகளின் போதும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. எனினும் சோதனைக்கு உட்படுத்தப்படாதிருந்தது.

எனினும் அண்மையில் இவர்கள் மீது அந்நாட்டு ஊக்கமருந்து தடுப்புப் பிரிவினர் பரிசோதனை நடத்தியுள்ளனர். எனினும் முடிவுகள் பற்றி இதுவரை அறியப்படவில்லை.



## சிந்தனைக்கு

எமது மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும், பாதுகாப்பாகவும்வாழ வேண்டும். இந்த இலட்சியம். நிறைவேறவேண்டுமாயின் நாம் போராடியே ஆகவேண்டும் ; இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 09-12-2004

தொலைபேசி / தொலைநகல் 021-2283948,060-2213244
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

# கட்டியம் கூறும் ரட்ணசிறி!

"எமது படைகளை நாம் ஆளணிகளாலும், ஆயுத வளத்தாலும், உளரீதியாகவும், உயர் ரக ஆயுதங்களினாலும், உபாயங்களாலும் வலுப்படுத்திக் கொண்டே இருக்கின்றோம். வலுப்படுத்தத்தான் போகின்றோம" என்ற பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறிவிக் கிரமநாயக்கவின் அறிவிப்பானது சிறிலங்கா அரசு மீண்டும் போரை நோக்கி விரைந்து செல்கின்றது என்பதற்குக் கட்டியம் கூறும் அறிவிப்பாகவே கொள்ளத்தக்கது.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் எவருமே இராணுவத்தைப் பலப்படுத்துவதும், இராணுவ ரீதியில் மேலாண்மை பெறுவதும் என்ற குறிக்கோளில் என்றுமே இரண்டாவது அபிப்பிராயத்திற்கு இடம்கொடுக்கவில்லை. இதில் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கமோ அன்றி ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமோ வேறுபட்ட கருத்தைக் கொண்டதாக இருந்ததில்லை.

யுத்தம் நடந்த காலகட்டத்தில் மாறிமாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் இராணுவத்திற்கென ஒதுக்கீடு செய்த நிதிவளமானது மிகப் பெரிது. இக்காலகட்டத்தில் வரவு–செலவுத்திட்டத்திற்கு அப்பால் அடிக்கடி குறைநிரப்புப் பிரேரணைகள் மூலம் ஆயுதப் படைக்கெனப் பெரும் தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில், அப்போதைய ஆட்சியாளர்கள் எவர் என்ற கேள்வி இருக்கவில்லை.

இந்நிலையானது, யுத்த நிறுத்தம் நிலவிய கடந்த மூன்றாண்டு காலத்தில்கூட மாற்றமடையவில்லை. குறைநிரப்புப் பிரரேரணைகள் கொண்டுவரப்படவில்லையே ஒழிய இராணுவத்திற்கென ஒதுக்கீட்டில் எவ்வேளையிலும், நிதி வெட்டுச் செய்யப்படவில்லை. மாறாக அதிகரித்த தொகையே ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வகையிலேயே அடுத்த ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்திலும், கடந்த ஆண்டைவிடப் பாதுகாப்பிற்கான நிதி அதிகரித்த தொகையிலேயே ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், இதிலும் சுட்டிக்காட்டத்தக்க விடயம் என்னவெனில், சமாதானப் பேச்சுவார்த்தைகளை வலியுறுத்திவரும் ஐ.தே.கட்சியும் பாதுகாப்பிற்கென அதிகரித்த நிதி ஒதுக்கீட்டிற்கு ஆதரவாக வாக்களித்துள்ளமையாகும்.

ஆனால், சிறிலங்கா அரசியலில் இத்தகையதொரு போக்கு பொதுப் பண்பாக வளர்ச்சி கண்டுவிட்டது என்றே கூறுதல் வேண்டும். அதாவது, எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் பாதுகாப்புச் செலவீனத்திற்கு எவ்வளவு பெரியளவு தொகை ஒதுக்கப்படினும் எதிர்க்கட்சியினரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காது ஆதரவாக வாக்களிப்பதாகும்

இதற்கு இக்கட்சிகள் நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைக்கான ஒத்துழைப்பு எனக் காரணம் கூறிக்கொள்ள முற்படலாம். ஆனால், இது அடிப்படையில் உண்மையான காரணமல்ல. தமிழர் மீதான ஒடுக்குமுறையில் அவர்கள் கொண்டுள்ள ஆர்வத்தின் / அக்கறையின் வெளிப்பாடே இதுவாகும்.

அவ்வாறு இல்லாதுவிடில், சமாதானத் தீர்வுகளில் அக்கறை கொண்ட எவரும் இராணுவ ரீதியிலான பெரும் நிதி ஒதுக்கீட்டிற்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருத்தல் வேண்டும். இதன் மூலம் தாம் சமாதானத்தின் மீது பற்றுறுதி கொண்டவர்கள் என்பதை உலகிற்கும், இலங்கை மக்களுக்கும், குறிப்பாகச் சிறுபான்மை மக்களுக்கும் வெளிக்காட்டியிருத்தல் வேண்டும்.

ஆனால், உயர்ந்தளவு நிதி ஒதுக்கீட்டிற்கு ஆதரவு அளிப்பதன் மூலம், இராணுவப் பெருக்கம், யுத்தத்திற்கான தயாரிப்பு என்ற ரீதியில் செயற்படும் அரசாங்கத்தின் போக்கிற்கு ஆதரவளிப்பதாகவே இது இருக்கும். ஆனால், இவர்களின் ஆயுத தளபாடப் பெருக்கமும், ஆளணிப் பெருக்கமும் இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காணவும், இலங்கையின் ஐக்கியத்தையும் கட்டிக்காக்க உதவுமா?

ஏனெனில், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறிவிக் கிரமநாயக்க தனது ஆயுதப் படையினருக்குத் தேவையானவற்றையெல்லாம் தாம் வழங்கத் தயாராக இருப்பதாகக் கூறலாம். உளரீதியிலான தூண்டுதலையும் வழங்குவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளலாம். ஆனால், கடந்த காலத்தில் நிகழ்ந்த வரலாற்றுப் பதிவுகளை ரட்ணசிறி விக்கிரமநாயக்கவினால் மாற்றி எழுதிவிட முடியுமா? அதிலிருந்து படைத்தரப்பால் விடுபடத்தக்கதாக முடியுமா?

அதாவது, அவர் பிரதமமந்திரியாக இருந்து யுத்தப் பிரகடனம் செய்து கொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவம் ஆனையிறவை இழந்ததையும், அதை மீட்டெடுக்க மேற்கொண்ட தீச்சுவாலை நடவடிக்கையில் இராணுவம் சந்தித்த பின்னடைவையும் இனிமாற்றிவிடத்தான் முடியுமா? அவர்களால் மறக்கத்தான் முடியுமா?

சிறிலங்கா ஆட்சியாளர்கள் இராணுவ மேலாண்மையைப் பெற பலமுறை முயன்றும் அதில் வெற்றிபெறவில்லை. அதில் தோல்வியையே சந்தித்தனர். ஆனால், அதன் விளைவானது ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்பதையும் தொலை தூரத்திற்கு விரட்டிச் சென்றுள்ளது. இந்நிலையில், இனியும், இராணுவ மேலாண்மையை நோக்கமாகக் கொண்டு சிறிலங்கா ஆட்சியாளர்கள் முயற்சிப்பார்களேயானால், ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது என்றுமே சாத்தியமற்றதாகிவிடும்.

# ஜேர்மனியில் 10 ஆயிரம் தமிழ் மக்களின் புகலிடக் கோரிக்கை நிராகரிப்பு

ஜேர்மனியில் புகலிடம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்களில் 10 ஆயிரம் பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், இவ்வருடம் இது வரையும் ஆயிரம் பேர் வரை இலங்கைக்குப் பலவந்தமாக நாடு கடத்தப்பட்டுள்ளனா என ஜேர்மனியிலுள்ள புகலிட மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்கள் மூலம் தெரிய வந்துள்ளது. இலங்கையில் கடந்த இரு தசாப்த காலமாக இடம்பெற்று வந்த யுத்த அனர்த்தங்கள் காரணமாக சுமார் ஒரு லட்சத்து 10 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் ஜேர்மனியில் அடைக்கலம் புகுந்தனர். இத்தொகையில் சுமார் ஒரு லட்சம் இலங்கையர்களுக்கு ஜேர்மனிய அரசு நிரந்தர வசிப்பிட அனுமதி மற்றும் பிரஜாவுரிமைகளை வழங்கியுள்ளது.

அதே சமயம் ஜேர்மனியில் புகலிடஅனுமதிகோரி விண்ணப்பித்தவர்களில் 10 ஆயிரம் பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் இருப்பதாகவும் இத்தகையவர்கள் கட்டம் கட்டமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது. இதுவரை இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட ஆயிரம் இலங்கைத் தமிழர்களில் பலரை ஜேர்மன் நாட்டின் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் பொலிசாரின் துணையுடன், இரவோடிரவாக அவர்களின் இருப்பிடங்களில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டுப் பிராங்பேட் விமான நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டு நாடு கடத்தப்பட்டனர் எனத்தெரியவருகின்றது.

இத்தகைய பலவந்த நாடு கடத்தல் சம்பவங்கள் காரணமாக இலங்கைத் தமிழ்க் குடும்பங்கள் பல்வேறு நடைமுறைக் கஸ்டங்களையும் அவலங்களையும் எதிர்நோக்கி வந்துள்ளனர்.

# எதிர்க்கட்சி எவ்வாறு நடந்து கொண்டாலும் வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவோம்

## — அவைத் தலைவர் மைத்திரிபாலசிறிசேன —

(கொழும்பு)

எதிர்க்கட்சி எத்தகைய நடவடிக்கைகளை எடுத்தாலும் பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான திறமை அரசிற்கு இருக்கிறதென அவைத்தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினமும் நேற்றும் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக செய்தியாளர்களிடம் தெரிவிக்கும் போதும் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில; எதிர்க்கட்சி பாராளுமன்ற சனநாயகத்திற்கு எதிராக செயற்படுவதாகவும் அவர் கூறினார். இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் செயற்பாடுகளைஉன்னிப்பாக அவதானிக்கும் போது இதன் பின்னணியில் ஒரு மறைமுகமான சக்தி செயற்படுவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்

## — வரவு செலவுத்திட்ட பிரேரணைகள் —

# வாக்கெடுப்புக்கு விடாமைக்கு தமிழ்க் கூட்டமைப்பினர் எதிர்ப்பு

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் பாராளுமன்றத்தில் தமது எதிர்ப்பை வெளியிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்ட விவாதங்கள் தொடர்பான பிரேரணை நேற்று வாக்கெடுப்புக்கு விடாமலேயே இருதரப்பின் இணக்கத்தின் மூலமாக நிறைவேற்றியமை தொடர்பாக கூட்டமைப்பினர் தமது எதிர்ப்பை வெளியிட்டபோதும் சபாநாயகர் அதற்கான பதிலை அளிக்காமல் சபையை ஒத்திவைத்ததாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைகலநாதன தெரிவித்துள்ளார். (32)

# வெள்ளப் பாதிப்புக்கு நிவாரணம் வழங்குவதில் மட்டக்களப்பு மாவட்டம் புறக்கணிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் 3ஆவது தடவையாக ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட சுமார் 20,000 குடும்பங்களுக்கு இதுவரை போதிய அரச நிவாரணங்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. வெல்லாவெளி, வாழைச்சேனை, ஆரை யம்பதி, பட்டிப்பளை, ஏறாவூர்பற்று, கோரளைப்பற்று மத்தி, ஓட்டமாவடி, காத்தான்குடி, வாகரை உட்படப் பல பிரதேசங்கள் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. தொழில் இன்றி அவதியுறும் இவர்களுக்குத் தேவையான உலர் உணவு நிவாரணம் வழங்க சுமார் 15- பில்லியன் தேவைப்படுவதாகவும் எனினும் 78 இலட்சம் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத் தகவல்கள் தொடர்ச்சியாக பெய்து வரும் மழைகாரணமாக ஏற்பட்டுவரும் பாதிப்புகள் குறித்து சமூக சேவைகள் திணைக்களத்திற்கு சேதவிபரங்கள அனுப்பப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளன. (32)

# தற்போதைய அரசியல் யாப்பை மாற்றுவதற்கு அவசியம் உள்ளது

## — அமைச்சர் டி.யூ.குணசேகர —

தற்போது அமுலில் இருக்கும் அரசியல் யாப்பு முறையை மாற்றுவதற்கான அவசியம் ஏற்பட்டிருப்பதாக அரசியல் யாப்பு அமைச்சர் டி.யு குணசேகர தெரிவித்துள்ளார். இதற்கான தேவை முன்னர் ஏற்பட்ட போதிலும் அதற்கான பெரும்பான்மை எந்தவொரு அரசாங்கத்திடமும் இருக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசியல் யாப்பே இதற்கான பிரதான காரணம் எனவும் ரூவான்வெலவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் தெரிவித்தார். தற்போதைப அரசியல் யாப்பின் காரணமாக ஆட்சியைக் கைப்பற்றும் எந்தவொரு அரசாங்கமும் நிலையாக செயற்பட முடியாமல் போகும் எனவும் அவர் தெரிவித்தார். (32)

# இலங்கை சனத்தொகையில் 9 வீதமானோர் ஊனமுற்றவர்கள்

## — சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ —

இலங்கையின் சனத்தொகையில் 9 வீதமானவர்கள் ஊனமுற்றோராக இருப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 2 தசாப்த காலமாக இலங்கையில் நடைபெற்ற யுத்தமே இதற்குக் காரணம் எனவும் கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போது அவர் சுட்டிக் காட்டினார். இலங்கையைப் போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு இந்த விடயம் பாரிய பிரச்சினை என்றும் அவர் கூறினார். (32)

## ஊழலுக்குஎதிரான தினம்அனுஷ்டிப்பு

சர்வதேச ஊழலுக்கெதிரான தினமாக பிரகடனப்படுத்தப்பட்ட டிசம்பர் 9 ஆம் திகதியை இலங்கை .இன்று அனுஷ்டிக்கிறது. இன்று பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள ஊழலுக்கெதிரான விசேட நிகழ்வில் நீதித்துறையைச் சார்ந்தவர்கள் உட்பட பல முக்கியஸ்த்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (32)

# திருமலை நகரில் புதியகாவலரண்கள் யுத்த நிறுத்தத்தை மீறும் செயல்

## கண்காணிப்புக் குழுவுக்கு புலிகள் முறையீடு

டிசெம்பர் 2ஆம் திகதிக்குப் பின்னர் திருகோணமலை நகரில் படையினர் புதிய காவலரண்களை அமைத்திருப்பது யுத்தநிறுத்த மீறலாகும் என்று விடுதலைப் புலிகள் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு எழுத்து மூலம் முறையிட்டுள்ளார்.

சிறிமாபுரச்சந்தி, அபயபுர புத்த கோயில்பகுதி, செல்வநாயகபுரம், பாம் குளம் மேல்பகுதி, மிகுந்துபுரம அருகில், அபயபுரம் அருகில் இரு காவலரண்கள் என்று பல காவலரண்களைப் படையினர் டிசெம்பர் 2ஆம் திகதிக்குப் பின்னர் அமைத துள்ளனர்.

"புதிய காவலரண்கள் தமிழர் வாழ்விடங்களைச் சுற்றியதாக அமைந்துள்ளன. இதனால் தமிழ் மக்கள் அச்சமடைந்துள்ளனர். மற்றும அவர்கள் இடம்பெயரும் நிலையிலும் உள்ளனர். புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ள செயல் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறும் செயலாகும் என்றும் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருகோணமலை மாவட்டத் தலைவருக்கு அறிவித்துள்ளார். (25)

# வடமராட்சிப் படுகொலை குறித்து விசாரணை நேற்று ஆரம்பம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறைப் பகுதியில் வைத்து இளைஞர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் நீதவான் க. அரியநாயகம் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் இருவர் நீதிமன்றில் ஆஜராகி தமது வாக்கு மூலங்களை அளித்தனர். வல்வெட்டித்துறைப் பொலிசார் சாட்சிகளை நீதிமன்றில் நெறிப்படுத்தினார்.

இதனிடையே மேற்படி சாட்சிகள் அச்சம் காரணமாக இதுவரையும், அசம்பாவிதம் தொடர்பான வாக்குமூலங்கள் எதனையும் தமக்கு அளித்திருக்கவில்லையென நீதிமன்றில் ஆஜராகியிருந்த வல்வெட்டித்துறைப் பொலிசார், நீதவானிடம் தெரிவித்திருந்தனர். இதையடுத்து நீதிமன்றில் அளித்தது போன்று வாக்கு மூலத்தை வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பதிவு செய்யுமாறும் நீதவான் சாட்சிகளிற்கு உத்தரவிட்டுள்ளார். அத்துடன் இவ் அசம்பாவிதத்தின்போது காயமடைந்ததாகக் கூறப்பட்ட பொன்னுத்துரை தெய்வேந்திரத்தினதும் மருத்துவ அறிக்கையினையும், அதே போன்று உயிரிழந்த இளைஞர்களது பிரதேச பரிசோதனை அறிக்கையினையும் நீதிமன்றில் சமர்ப்பிக்க உத்தரவிட்ட நீதவான் விசாரணைகளை எதிர் வரும் 22ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார். (27)

### பனை...

கண்ட ஊழியர்கள் இது பற்றி அப்பகுதி காவல்பணிமனையில் தெரியப்படுத்தினர்.

அங்கு சென்று சடலத்தைப் பார்வையிட்ட பளை காவல் பணிமனைப் பொறுப்பாளர் மகேந்தி அவர்கள் சடலத்திற்கு அருகில் "குறுணல்" எனப்படும் நஞ்சு மருந்து இருந்ததாகவும் குறிப்பிட்ட நபர் இரவு வேளையே இறந்து விட்டதாகவும் தெரிவித்தார்.

பெரியவளை பளையைச் சேர்ந்த கதிரேசு நடேசலிங்கம் (வயது 54) என்பவரே சடலமாகக் காணப்பட்டார்.

மேலதிக விசாரணைகளைக் கிளிநொச்சி நீதிமன்ற நீதியாளர் மேற்கொண்டு, பிரேத பரிசோதனை மேற்கொண்டபின் உரியவர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் காவல் பணிமனைப் பொறுப்பாளர் தெரிவித்தார். (லோ,கு)

# கிளி.மகாவித்தியாலயத்தில் "பனைச்செல்வம்" நூல் அறிமுகவிழா

(அலுவலக செய்தியாளர்)

"பனைச்செல்வம்" நூல் அறிமுகவிழா நாளை பிற்பகல் 1.00மணிக்கு உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் தலைமையில் கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், தால மூலவள அபிவிருத்தி நிறுவன இயக்குனர் வீ.ஜீ.தங்கவேல் ஆகியோரின் "பனைச் செல்வம்" நூல் அறிமுக நிகழ்வில் தமிழீழக்கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், தமிழீழ அரசியல்துறைப் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் கா.வேதநாயகன் மற்றும் நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து நிகழ்வினை சிறப்பிக்கவுள்ளனர். (சோ)

# பொது நிகழ்வுகளில் சிங்கக்கொடி ஏற்றுவது கட்டாயமாகிறது

## -அரசாங்கம் அறிவிப்பு

பொதுநிகழ்வுகளில் சிறிலங்கா தேசியக் கொடியை ஏற்றி தேசிய கீதம் இசைக்க வேண்டும் என பொதுமக்கள் பாதுகாப்பு சட்ட ஒழுங்கு அமைச்சு நேற்று முடிவெடுத்துள்ளது. அவ்வாறு செய்யாவிடில் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை இவ் அமைச்சின் செயலாளர் திலக் ரணவீரராஜ கூறியுள்ளார். இதனை பொலிஸ் மா அதிபருக்கும் தெரியப் படுத்தியுள்ளதாக தெரிவித்தார். பொலிஸ்மாஅதிபர் சந்திரா பெனாண்டோ தனக்கு இதனைப் பற்றி எதுவித அறிவித்தலும் இதுவரை கிடைக்கவில்லை என தெரிவித்தார்.

இதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கருத்துரைக்கையில் அரசாங்கம் எடுத்த முடிவானது தமிழத் தேசத்தைப் பொறுத்தவரை சாத்தியமான ஒன்றல்ல என்று கூறினார். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழ்த் தேசம் இலங்கையின் தேசியக் கொடியையோ தேசிய கீதத்தையோ முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே அரசாங்கம் அதனை கைவிடுவது நல்லது எனவும் அல்லாவிடில் தேவையற்ற பிரச்சனைகள் உருவாகும் எனவும் தெரிவித்தார். (32)

### தமிழீழ...

சந்தித்துக் கலந்துரையாடி அவர்களின் சுக நலன்களையும் கேட்டறிந்தனர்.

அதனையடுத்து சர்வதேச செஞ் சிலுவைச்சங்கப் பிரதிநிதி கருத்துத் தெரிவிக்கையில் தமிழீழ காவல் துறை சீர்திருத்தப் பிரிவில் கைதிகள் யாவரும் சிறந்தமுறையில் பராமரிக்கப்பெற்று நிர்வகிக்கப்பட்டு வருவது குறித்து தங்கள் பாராட்டினைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ,சு)

# பாராளுமன்றக் கடமைகளை ஆற்ற சபாநாயகர் அனுமதியளிக்க வேண்டும்

## -நீதிமன்ற தண்டனை விதிக்கப்பட்ட திசாநாயக்க கோரல்

நுவரெலியா மாவட்டத்தின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தான் பாராளுமன்றில் தனது கடமைகளை ஆற்றுவதற்கு அனுமதி அளிக்கவேண்டும் என 2 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி திசாநாயக்க சபாநாயகருக்கு அவசர கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரகாரம் இந்த ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டும் எனக் கோரியுள்ளார்.

இதேவேளை எஸ். பி திசநாயக்கவின் சிறைத்தண்டனை தொடர்பில் சர்வதேச மட்டத்தில் தாம் நகர்வுகளை மேற்கொள்ளவுள்ளதாக ஜக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திசஅத்தநாயக்கா தெரிவித்துள்ளா. (32)

### புளொட்...

குண்டு தாக்குதலிற்கு உள்ளாகியிருந்தது. யாழ்.மாவட்டத்திற்கான தலைமை அலுவலகமாக இவ்வலுவலகமே இருந்திருந்த நிலையில் கைக்குண்டுத் தாக்குதலையடுத்து அங்கு இராணுவப் பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

ஆயினும் இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து பாதுகாப்புக் கருதி புளொட் அமைப்பின் உறுப்பினர்கள் தங்கிவந்த மற்றைய பணிமனையே நேற்றுக் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்பாக யாழ் பொலிஸ் நிலையம் மற்றும் இலங்கை இராணுவத்தின் 512 ஆவது படைப்பிரிவின் தலைமையகமே முற்றாக பாதுகாப்பு வலையப் பகுதியினுள்ள இப்பணிமனையே கைக்குண்டு வீச்சுக்கு உள்ளானது. (27)

### மட்டு...

விஜயம் செய்து விசாரணைகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.இதேவேளை நேற்று முன்தினமிரவு ஓட்டமாவடியில் முகமது அலியார் சேகு இஸ்மாயில் என்பவரின் வீட்டின் மீது இனந் தெரியாத நபர்களினால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. இதில் எவருக்கும் எவ்வித பாதிப்பும் இல்லை. ரி-56 ரக துப்பாக்கி மூலம் 6 வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன. (32)

### எஸ்.பி...

பேரில் இண்டுவருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்ததை எதிர்த்து அவரை பாராளுமன்றிற்குக் கொண்டுவர வேண்டும் என எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.முதலில் எஸ்.பி.திசாநாயக்கவை பாராளுமன்த்திற்கு அழைத்து வரும்வரை கூட்டங்களை நடத்த இடமளிக்கப்போவதில்லை என மிகந்தவிஜேசேகர கூறினார்.

இதனை அடுத்து ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் அவையில் அமர்ந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் பாராளுமன்றத்தில் பெரும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டது.

இதனை அடுத்து 10.15 மணியளவில் சபைநடவடிக்கைகள் பதினைந்து நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டன.

பின்னர் மீண்டும் 11.20 இற்குப் பாராளுமன்றம் கூடியது. இதன் போது விவாதத்தை ஆரம்பிக்குமாறு சபாநாயகர் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் கேட்டுக் கொண்டார்.

அப்போது எழுந்து நின்ற பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே எஸ்.பி.திஸநாயக்கவை பாராளுமன்றத்திற்கு அழைத்து வரும்வரை பாராளுமன்ற அலுவல்களை முன்னெடுத்துச் செல்ல அனுமதிக்கப் போவதில்லையென ஐக்கியதேசியக்கட்சி தீர்மானித்துள்ளதாகக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் குழப்பநிலை தோன்றியது. இதன் போது தயாசிறி ஜயசேகர சங்க பண்டார ஜோக்கின் பெர்னாண்டோ ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் செங்கோல் வைக்கப்பட்டிருந்த கூட்டத்திற்குச் சென்று அதனை எடுக்க முயன்றனர்.

ஆனால் அரச தரப்பு உறுப்பினர்கள் இதனைத் தடுக்க முயன்றனர். அப்போது தயாசிறிஜயசேகர அமைச்சர் தினேஷ் குணவர்த்தனாவைத் தாக்க முயன்றார். அப்போது பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் செங்கோலைத் தூக்கியவாறு எதிர்க்கட்சியினர் பக்கம் சென்றார். இதனால் சபை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது.

இதனையடுத்து பாராளுமன்ற காவலர்கள் எதிர்க்கட்சி நுழைவாயில் பக்கம் இருந்த செங்கோலைக் கொண்டுவந்து உரிய இடத்தில் வைத்தனர்.

### சபா...

சர்களாக உள்ள இருவர் சபாநாயகருக்கு எதிராக வாக்களிப்பர் எனவும் ஜாதிக கெல உறுமயவும் எதிராக வாக்களிக்கும் எனவும் தெரிவித்தனர். (32)

### ஆளும்...

எமது கடசித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க 50 வருடநிறைவில் சனாதிபதி தனது சொந்த நிகழ்ச்சி நிரலையே தொடர்கிறார். மக்கள் 1 நாளிற்கு 3தடவை உணவை வேண்டும் இப்பொழுது சனாதிபதி மூன்றாந்தடவை அதிகாரத்தை எடுப்பதிலேயே சகல விடயங்களையும் செய்கின்றார் எனவும் சனாதிபதி அரசியல் அடிப்படை மாற்றத்தின் மூலம் நாட்டைச் சிக்கலிற்குள்ளாக்கப் போகிறார் எனவும் குறிப்பிட்டுள்ளார் ஜே.வி.பி யினர் நோர்வே தூதருக்கு நோர்வேயினை சமாதான முன்னெடுப்புகளிலிருந்து நிறுத்தும் படியும் கேட்டுள்ளனர். நோர்வே நடுநிலமைவகிக்கவில்லை எனவும் விடுதலைப்புலிகளிற்குச் சார்பாக நடப்பதாகவும் இதனால் நோர்வேயை நம்பமுடியாதென்றும் நோர்வே மீது குற்றம் சுமத்துகின்றனர் மறுபக்கத்தில் சனாதிபதி நோர்வேயினைத் தொடர்ச்சியாக உதவிவழங்கக் கோருகின்றார். சனாதிபதி பாதுகாப்பு அமைச்சிற்குப் பொறுப்பாக உள்ளபொழுது ஜே.வி.பி இவ்வாறு குற்றம் சாட்டுகிறது. போர்நிறுத்த உடன்படிக்கைச் சட்டத்திற்கு முரணானது என ஜே.வி.பி இதை இரத்துச் செய்யுமாறு நீதிமன்றத்தைக் கோருகிறது ஜே.வி.பி. அரசின் முக்கிய பங்குக் கட்சியாகவுள்ளபோது போர்நிறுத்த உடன்படிக்கை இலங்கைக்கு விரோதமானது என ஜே.வி.பி உணர்ந்தால் நீதிமன்றத்திற்குச் செல்லாது போர்நிறுத்த உடன்படிக்கையை ஏன் ரத்துச்செய்ய முடியாது?

குமாரதுங்கவின் அரசு முன்னைய அரசுக்கு எதிராகக் குற்றஞ் சாட்டப்பட்ட தளவிடயங்களில் சிறு மாறுதல்களை மேற்கொண்டுள்ளது. மனிராசகுளம் முகாம் அகற்றப்பட்டுள்ளதா? திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழவுள்ள முகாம்கள் அகற்றப்பட்டுள்ளதா? எதுவுமே நடைபெறவில்லை. அரசு அடிப்படை வினாக்களிற்கு உள்ளக முரண்பாடுகளுடன் புதிராக உள்ளது. தேசிய பிரச்சினைக்கு அரசுடன் ஒத்துழைக்கத் தயாராயுள்ளது. நாங்கள் இதுதொடர்பாக விரைவில் ஒருபேச்சு நடத்த ஆயத்தமாக உள்ளோம். தேர்தல் முறை மாற்றம், சமாதான முன்னெடுப்புக்கள், பொருளாதாரம் போன்ற விடயங்களிற்கு நாங்கள் இணைவதற்கு தயாராகியுள்ளோம். ஆனால் அதற்கு மறுபக்க விடை இல்லை எனவும் குறிப்பிட்டார்.

டிசெம்பர் 10ஆம் நாள் சர்வதேச மனித உரிமைகள் தினம் இத்தினத்தை வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் சிறப்பாக கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கொண்டாடுகின்றது. இந்நிகழ்விற்கு எல்லோரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். (சி-11002)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.